இதழ் 370
20 டிசம்பர் 2025
20 பக்கங்கள்

# இலக்கு


வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube. com/@IlakkuWeb2. 0
LIKE US! facebook. com/ilakku. ilakku. 10
FOLLOW US! twitter. com/Ilakku1



விதுரன்

## மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய உறவு



கிண்ணியான்

## தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றுமிக்க கன்னியா பாதுகாக்கப்படுமா?



வேல்ஸில் இருந்து அருஸ்

## போர்க்களமாகுமா இலங்கை கடல்?


© 2025 இலக்கு இணையம்

## இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல மருந்துகள் தரமற்றவை என தகவல்

2025 ஆம் ஆண்டில் இது வரை மொத்தம் 93 மருந்துகள் தர சோதனைகளில் தோல்வியடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த தரக்குறைவான மருந்துகளில் பெரும்பாலானவை இந்தியாவிலும் உள்நாட்டிலும் உற்பத்தி செய்யப்பட்டவை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மீதமுள்ள மருந்துகள் சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்தவை ஆகும்.

தரமற்றவை என அடையாளம் காணப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும் சில மருந்துகளின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்தமாக 600 மருந்துகளின் தரக் குறைபாடுகள் பதிவாகியுள்ளன.

இது பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, அண்மையில் மயக்க மருந்துடன் தொடர்புடைய இரு மரணங்கள் குறித்து விசாரணைகள் நடந்து வருவது இந்த விவகாரத்தை மீண்டும் தீவிரப்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## மலையகத்தின் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்குள் பிளவு



மலையகத்தின் பிரதான தொழிற் சங்க அரசியல் கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அதன் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கு இடையே முறுகல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விலகுவதற்கு ஜீவன் தொண்டமான் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் குறித்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தி பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, பொறுப்புகளிலிருந்து விலகுவது தனது நோக்கமல்ல என்றும் காலத்தின் தேவைக்கேற்ப ஸ்தாபன கட்ட மைப்பில் சில மாற்றங் களை செய்ய வேண்டியது அவசியம் என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை தவறான புரிதலுடன் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்களை கவனத்திற் கொள்ள வேண்டியதில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸ்தாபனத்தை ஜனநாயக முறையில் வலுப்படுத்துவதே எமது நோக்கம்.

இதன் அடிப்படையில் மூன்று மாதங்களுக்குள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கூட்டப்பட்டு தேவையான மாற்றங்கள் குறித்து தீர்மானிக்கப்படும்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படும்: பிரதமர்

தேசிய மக்கள்சக்தியின்தேர்தல் கொள்கை பிரகடனத்தில் உறுதியளித்தபடி, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறை நிச்சயமாக ஒழிக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று (19) பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையானது, முன்மொழியப்பட்டுள்ள புதிய



அரசியலமைப்பின் ஊடாகவே ஒழிக்கப்படும்.

புதிய அரசியலமைப்பின்றி இதனைச் செய்ய முடியாது என்பதால், அதற்கான ஆய்வுப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## பெரும் மனிதப் பேரவலத்தை நோக்கி சூடான்

சர்வதேச மீட்புக் குழுவின் (IRC) உலகளாவிய மனிதாபிமான நெருக்கடிகளுக்கான அவசர கண்காணிப்புப் பட்டியலில் சூடான் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது என்று உதவிக் குழு செவ்வாயன்று(16) தெரிவித்துள்ளது.

வரும் ஆண்டில் மனிதாபிமான அவசரநிலைகள் மோசமடையும் அபாயத்தில் உள்ள 20 நாடுகளை குறிப்பிட்டுள்ளது. சூடான் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து பாலஸ்தீன பிரதேசங்கள்மற்றும்தெற்கு சூடான்உள்ளன. பட்டியலில் உள்ள பிற ஆப்பிரிக்க நாடுகளில் எத்தியோப்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு



மாலி மற்றும் புர்கினா பாசோ ஆகியவை அடங்கும்.

சூடானில் 15 மில்லியன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## தாய்வானுக்கு ஆயுதம் சீனா கடும் கண்டனம்




தாய்வானுக்கு $11.1 பில்லியன் மதிப்புள்ள ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளிக்கும் அமெரிக்காவின் முடிவை சீனா கடந்த வியாழக்கிழமை(18) கண்டித்துள்ளது, மேலும் வாஷிங்டன் தீவை ஆயுதமாக்குவதை "உடனடியாக நிறுத்த" வலியுறுத்தியுள்ளது.

தாய்வானுக்கு நவீன ஆயுதங்களின் ஒரு பெரிய தொகுதியை அமெரிக்கா வழங்கியதைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுயாட்சி தீவை அதன் பிரதேசத்தின் ஒரு பகுதியாகக் கருதும் சீனா, இந்த நடவடிக்கையை "ஆபத்தான செயல்" என்றும் அதன் இறையாண்மையை மீறுவதாகவும் கூறியுள்ளது.

"ஒரே சீனா கொள்கையை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## அமெரிக்காவின் தடையை மதிக்காத இந்தியா

மாஸ்கோவின் இரண்டு முன்னணி எண்ணெய் உற்பத்தியாளர்கள் மீது அமெரிக்கா தடை விதித்த போதிலும், ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி டிசம்பர் மாதத்தில் அதிகமாக இருக்கும் என்று ராய்ட்டர்ஸ் புதன்கிழமை(18) செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷ்ய எண்ணெய்க்கு அதிக தள்ளுபடியை வழங்கும்



அனுமதிபெறாதநிறுவனங்களிடமிருந்து வாங்குகின்றன. இந்தியாவின்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## நோபல் பரிசு நிறுவனத்திற்கு எதிரான குற்றவியல் வழக்கு




உலகில் அதி உயர்ந்த விருதான நோபல் பரிசை வழங்கிவரும் நோபல் அறக்கட்டளைக்கு எதிராக விக்கிலீக்ஸ் இணை நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் குற்றவியல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

அதில் நோபல் பரிசு நிதியை வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங்குவதன் மூலம் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டியுள்ளார். மச்சாடோ தனது சொந்த நாட்டைத் தாக்குமாறு அமெரிக்காவிடம் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# பாரதத்துக்குள் பதில் தேடி ஓடும் தமிழ்த்தேசிய கட்சிகள்..!

**பா. அரியநேத்திரன்**

*ஈழத்தின் தமிழ்தேசிய கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை எனபதை மீண்டும் ஒருதடவை நிரூபித்துள்ளனர் தமிழ்தேசிய கட்சிகள். பாரத்துக்குள் பதில் கேட்டு அழுத்தம் கொடுக்க இரண்டு தமிழ்தேசிய கட்சி அணிகள் இறங்கியுள்ளன.*




***1. கடந்த 2025, டிசம்பர்,18, ம் திகதி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த நால்வரும், தமிழ்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசனும் இணைந்து ஐவர் கொண்ட குழு தமிழ்நாட்டுக்கு திடீரென சென்று இலங்கையில் தற்போதைய தேசிய மக்கள் அரசாங்கம் புதிய அரசியல் யாப்பை திருத்தம் செய்து "ஏக்கியராச்சிய" அரசியலமைப்பை தயாரிப்பதாகவும் அதனைஇந்தியஅரசுதடுத்துசமஷ்டிஅடிப்படையிலான தீர்வு நோக்கிய அரசியலமைப்பு வரைவு வரவேண்டும் என்பதற்கான அழுத்தத்தை தமிழ்நாட்டு முதலமைச்சர் உட்பட தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் இந்திய பிரதமருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கூறும் சந்திப்புக்களை தமிழ்நாட்டில் தங்கி இருந்து செய்து வருகின்றனர்.***

***2. இலங்கை தமிழ் அரசுக்கட்சியும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் இணைந்து எதிர்வரும் 2025, டிசம்பர்,23, ல் இலங்கையில் உள்ள இந்திய தூதுவரை சந்தித்து மாகாணசபை தேர்தலை தாமதியாது நடத்துவதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு வழங்கவேண்டும் என கூறும் சந்திப்பை நடத்த தீர்மானித்துள்ளனர்.***



*இந்த இரண்டு அணிகளைவிட இன்னும் எஞ்சியிருக்க கூடிய தமிழ்த்தேசிய கட்சிகளான கடந்த 2024 பொதுத்தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி கே வி தவராசா தலைமையிலான ஜனநாய தமிழரசுக்கட்சி, முன்னாள் முதலமைச்சர் சி வி விக்கினேஷ்வரன் தலைமையிலாக தமிழ் மக்கள் கூட்டணி, அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம், ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணி, சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ் தேசிய கட்சி என்பனவும் இந்த இரண்டு அணிகளுடனும் சேர்ந்து செல்லவில்லை ஆனால் மாகாணசபை தேர்தல் அறிவித்தால் நிச்சயமாக தேர்தலில் போட்டியிடு வார்கள்.*

*தற்போது தமிழ்நாட்டுக்கு சென்ற தமிழ்தேசிய கட்சி குழுவினர் மாகாணசபை தேர்தலை பற்றி தமிழ்*

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## ஈழத் தமிழர் இறைமை மீளுறுதிக்காக பேரிடர் மீண்டெழுலலுக்கான மாநாடுகளை அனைத்துலக தமிழர் முன்னெடுக்க வேண்டும்

இலக்கின் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் 2025ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள். இவ்வாண்டு கிறிஸ்மஸ் பருவகாலத்தில் உலகெங்கும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட காலநிலைச் சீர்கேடுகள், போர்களின் வழியாக சாதாரண மக்கள் வாழ்வுக்கு இனங்காணக்கூடிய அச்சங்களை வாழ்வாகக் காணுகின்ற நிலையில் வாழ்கின்றனர். "இச்சிறியோரில் ஒருவருக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என மனிதநேய இரக்கச் செயல்களே இறையாசியைப் பெறுவதற்கான ஒரே ஒரு வழியெனக் கிறிஸ்து தானே கூறிய வார்த்தைகளை மனதிருத்தி, ஆடம்பரக் கொண்டாட்டங்களைத் தவிர்த்து பாதிப்புற்ற மக்களுக்கு அவர்கள் மீண்டும் பாதுகாப்பான அமைதிவாழ்வுக்கும் வளர்ச்சிகளுக்கும் திரும்புவதற்கு ஒவ்வொருவரும் தங்களால் இயன்றதைச் செய்யும் காலமாக இந்தக் கிறிஸ்மஸ் பருவகாலத்தை முன்னெடுக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்தாக உள்ளது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் அவர்களுடைய வரலாற்றுத் தாயகத்தில் அவர்களின் இறைமையையும் தேசியத்தையும் நீக்கி, வரலாற்றில் வந்தேறிய குடிகள் (habitant) முன்னாள் சிறிலங்கா அமைச்சர் காமினி திசநாயக்க திம்புக்கோட்பாட்டை ஏற்க மறுத்து வெளியிட்ட அதே உத்தியைப் பயன்படுத்தி "ஏக்கிய இராஜ்ஜிய" அரசியலமைப்பை கொண்டு வருவதற்குச் சிறிலங்காவின் இன்றைய தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள் இயற்கை பேரிடர்களுக்கு மத்தியில் வேகமாகச் செயற்பட்டு வருகின்றனர். அதே நேரத்தில் பிரித்தானிய காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சி பாராளுமன்ற முறைமை என்னும் நவகாலனித்துவ ஆட்சி முறைமைக்குள் சலுகைகளை பெற்று கூட்டு வாழ்வு வாழ விரும்பும் விருப்புடையவர்களாக இன்று உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் கூட்டாட்சிக் கோரிக்கைகள் ஈழத்தமிழர்களால் பலநிலைகளில் பலநாடுகளின் பக்கத்துணையுடன் முன்வைக்கப்பட்டு வரும் நிகழ்வுகளும் காணப்படுகின்றன.

இந்நிலையில்தான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுடன் இணைந்து தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து ஏக்கிய இராஜ்ஜிய அரசியலமைப்பின் வருகையை இந்திய மத்திய அரசின் அழுத்தங்களின் வழியாகத் தடுப்பதற்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். ஈழத்தமிழர் தமிழகத்தமிழர்களின் இனத்துவ உறவைப் பகைமையாக்கும் வழியில் தொடரும் வடக்கின் கடலில் இந்திய ரோலர் படகுகளின் மீன்பிடிப் பிரச்சினை குறித்தும் பேசியுள்ளனர். இவர்கள் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளிலும் இந்தத் தங்கள் கோரிக்கைக்கு உதவுமாறு கோரி வருகைகளை மேற்கொள்ளக் கூடுமென்கிற எதிர்பார்ப்புக்களும் உள்ளன.

அதே வேளை ஜனதா விமுக்கி பெரமுனையின் ரில்வின் டி சில்வா இந்தியாவுக்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ள நேரத்தில் இவர்களின் இந்த நகர்வும், தமிழரசுக்கட்சியினர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த மற்றைய தமிழர் சனநாயகக் கட்சிகள் என்னும் கட்சிகளையும் இணைத்து இந்தியத்தூதுவரை 23ம் திகதி சந்திக்கவுள்ளனர்.

இவ்வாறாக மீளவும் ஈழத்தமிழர்களின் இன்றைய அரசியல் கட்சியினர் தமிழகத்தையும் மத்திய அரசையும் உதவிக்கு அழைத்துள்ள போதிலும் இவர்களிடை எவருக்குமே ஈழத்தமிழர்களின் சொந்த மண் பாதிப்புக்குள்ளாகிறது என்ற ஈழத்தமிழரின் மக்கள் இறைமையின் அடிப்படையில் தங்கள் கோரிக்கைகளை முன்வைக்காது ஏதோ ஒரு வகையில் சிறிலங்காவின் வேகத்தை மந்தப்படுத்த முயற்சிக்கின்றார்களே தவிர சிறிலங்காவின் செயற்பாடு ஈழத்தமிழரின் தாயக தேசிய சுயநிர்ணய உரிமைகளை முற்றாக மாற்றியமைக்கும் ஆக்கிரமிப்பு ஒடுக்குமுறை என்கின்ற உண்மையை உலகுக்கோ தமிழகத்துக்கோ இந்த அரசியல்வாதிகள் யாருமே துணிந்து கூறவில்லை என்பதே உண்மை.

இதற்கு சிறிலங்காவின் அரசியலமைப்பின் 6ம் திருத்தமும் சிறிலங்காவின் பயங்கரவாதத் தடைச்சட்டமும் இவர்களுக்கான அச்சமாக உள்ளதென்பது வெளிப்படையான உண்மை. இத்தகைய நிலையில் அனைத்துலகிலும் வாழும் ஈழத்தமிழர்கள் தான் ஈழத்தமிழர் தாயகத்தின் இன்றைய அரசியல் எதார்த்தத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய கருத்தரங்குகளை மாநாடுகளை நடாத்த வேண்டிய தேவை பலமாக உள்ளது.

இதனை அனைத்துலகத் தமிழர்கள் செய்கின்ற பொழுது தாயகமக்களிடை இதன் தேவை குறித்த தெளிவுகளை முன்னெடுக்க வேண்டியது முக்கியம். அதே வேளை இது பிரிவினைக்கான தூண்டல் அல்ல ஈழத்தமிழர்களின் இறைமையை மீளுறுதி செய்வதற்கான சனநாயக வழி என்பது அனைத்துலகிற்கும் தெளிவாக்கப்பட வேண்டியதும் முக்கியம். இத்தகைய மாநாடுகள் கருத்தரங்குகள் அனைத்து அனைத்துலகத் தமிழர்களையும் வேறுபாடுகளைக் கடந்து இணைத்து முன்னெடுக்கப்பட வேண்டியது எல்லாவற்றையும் விட அதிமுக்கியமான தேவையாக உள்ளது. இதனைச் செயற்படுத்த வெறுப்புப் பேச்சுக்களை கைவிடுவது மட்டுமின்றி ஊடகமொழியை யாரையும் புண்படுத்தாது அமைத்துக்கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது. சனநாயக வழியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகையில் அணுகுமுறையில் வேறுபாடுகள் வரலாம். ஆனால் அந்த அணுகுமுறைகள் தெளிவாக்கப்பட்டு பல்குழுக்கள் பாழ்செய்யும் உட்பகைகள் வராது செயற்பட வேண்டியது தலையாய தேவையாக உள்ளது. இதற்கு இதுவரை சிறிய அதிகாரங்களுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் செயற்பாட்டாளர்கள் அவர்களது அதிகாரப்பட்ட அணுகுமுறைகளைக் கைவிட்டு அவர்களது நோக்குகளில் நின்றபடியே பொதுநோக்கில் இணைவது மேற்குலக அரசியல் மொழியில் கூறுவதானால் "பொதுநன்மை" க்காக தங்கள் தங்கள் கட்சிநிலைகள் அமைப்பு நிலைகள் இயக்க நிலைகளில் நின்றவாறே ஒருங்கிணைதல் அவசியம்.

இன்று உலகம் கூட்டாண்மை பங்காண்மைகள் வழியாகவே நாளாந்த அரசியலை பொருளாதாரத்தை மையப்படுத்தி நடாத்திக் கொண்டிருக்கிறது. இதுவே உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையின் பொதுப்பண்பாக இன்று மாறியுள்ளது. சிறிலங்கா அரசாங்கமும் இந்தப் பொதுப்பண்பை இனங்கண்டு தனது கொள்கைக் கடும்போக்குகளில் நில்லாது சாதுரியமாக நடந்து வருகிறது. ஆனால் ஈழத்தமிழர்கள் இந்த விடயத்தில் நடைமுறையில் மிகமிகப்பலவீனமான நிலையில் இருப்பதே கடந்த 16 ஆண்டுகளாக தங்களுக்கு நடாத்தப்பட்ட இனஅழிப்பிற்கான உலக நீதியைக் கூடப் பெற இயலாது இருப்பதன் மூலகாரணமாக உள்ளது. மேலும் இந்த மாநாடுகள் கருத்தரங்குகள் தனியே அரசியலை மட்டும் உள்ளடக்காது மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற வகையில் மீள் உற்பத்தி செய்யத் தக்க வகையில் எல்லாத்துறைகளிலும் நடாத்தப்பட வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

இலக்கின் 2021ம் ஆண்டு 188 வது ஆசிரியத் தலையங்கத்தில் "ஈழத்தமிழருக்கான இடர்முகாமைத்துவம் உடன் உருவாக்கப்பட வேண்டும்" என்று எழுதி அதனைக் கட்டுரைகள் மூலமும் இலக்கு வலியுறுத்தியது. ஆனால் அதனைச் செய்யாது விட்டதன் விளைவுகளை இன்று தாயகமும் தாயக மக்களும் நடைமுறையில் காண்கின்றனர். எனவே இந்த மாநாடுகள் கருத்தரங்குகள் வழியாக இறைமையை மீளுறுதி செய்தலையும் பேரிடரில் இருந்து மீண்டெழுதலையும் தாயக மக்கள் அடைவதற்கு இயன்றதைச் செய்ய வேண்டும் என்பதே இலக்கின் ஆணித்தரமான எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**



# மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய உறவு

விதுரன்

தாயகத் தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் தமிழகம் என்பது வெறுமனே அண்மித்தவொரு மாநிலம் மட்டுமல்ல, அது வொரு உணர்வுப்பூர்வமான பின்களமாகவும், சர்வதேச அரங்கில் தமிழர்களின் குரலை எதிரொலிக்கும் வலுவான தளமாகவும் இருந்து வந்துள்ளது.




தந்தை செல்வா முதல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வரை தயாக தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் டில்லியை நோக்கிய தமது அரசியல் நகர்வுகளை தமிழகத்தின் ஊடாகவே அதிகளவில் முன்னெடுத்திருந்தனர்.

இருப்பினும், கடந்த சில தசாப்தங்களாக தாயக தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழகத்தின் பிரதான அரசியல் சக்திகளுக்கும் இடையே பாரியதொரு 'தொடர்பாடல் இடைவெளி' நிலவி வருகின்றது. இந்த இடைவெளியை நிரப்புவதற்கான முக்கிய முயற்சியாக, தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினரின் தற்போதைய தமிழக விஜயம் அமைந்துள்ளது.



கஜேந்திரகுமார் தலைமையிலான அணியினது தமிழக விஜயம் வட,கிழக்கு அரசியல் பரப்பில் வாதவிவாதங்களை தோற்றுவித்துள்ள அதேநேரம், டில்லி, கொழும்பு மத்திய அரசுகளின் மிகமிக கூர்மையான அவதானத்தையும் ஒருங்கே கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.




வரலாற்று ரீதியாகப் பார்க்கையில், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்ற ஆளுமை மிக்க தலைவர்களுக்குப் பிறகு, தாயக தமிழ் தேசிய அரசியல் தலைவர்கள் தமிழகத்தின் ஆட்சிப்பீடத்தில் இருந்த தலைவர்களுடன் கொள்கை ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் நெருக்கமான உறவுகளைப் பேணுவதில் போதிய ஆர்வம் காட்டியிருக்கவில்லை.



குறிப்பாக, கருணாநிதி - ஜெயலலிதா என்ற இரு பெரும் ஆளுமைகளுக்கு இடையிலான அரசியல் போட்டிகளுக்குள் சிக்கிக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில், பல தமிழ் தேசியத் தலைவர்கள் தமிழக அரசியலைத்தள்ளி நின்று வேடிக்கை பார்த்தனர். அதுமட்டுமன்றி, மறைந்த சம்பந்தன் போன்ற தலைவர்களை நேரடியாக டில்லி கையாள ஆரம்பித்திருந்தமையும் அதற்கு மற்றொரு காரணமாக இருக்கிறது.

இந்தப் போக்கினால் தமிழகத்திற்கும், தாயகத்துக்கும் இடையிலான அரசியல் உறவுகள் என்பதற்கு அப்பால் அனைத்து மட்டங்களிலான இருதரப்பு உறவில் வெகுவானதொரு தேக்க நிலை



நீடித்தது. ஆனால், இக்காலகட்டத்தில் மலையகத் தலைவர்களான செந்தில் தொண்டமான், ஜீவன் தொண்டமான் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் போன்றோர் தமிழகத்தின் முக்கிய தலைவர்களுடன் மிக நெருக்கமான உறவுகளை தொடர்ச்சியாகப் பேணி வருகின்றமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

அண்மையில் ரவூப் ஹக்கீம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்ததும், செந்தில் தொண்டமான் உள்ளிட்ட மலையகத் தலைவர்கள் தமிழகத்துடன் கல்வி, கலாசாரம் மற்றும் வர்த்தக ரீதியான உறவுகளைத் தடையின்றித் தொடர்ந்து வருவதும் இதற்குச் சான்றாகும்.




இந்தத் தலைவர்கள் தமிழகத்தின் பலமான அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களை ஆகக்குறைந்தது தனிப்பட்ட வகையிலாவது தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வரும் நிலையில், தமிழ் தேசியக் கட்சிகள் குறைந்த பட்ட தொடர்பாடல் உறவுகளில் இருந்து அந்நியப்பட்டிருந்தமை தமிழ்த் தேசிய அரசியலின்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# மலையகத் தமிழரின் வடக்கு-கிழக்கு நோக்கிய குடிப்பெயர்வு சாத்தியமா?



ஐ.வி.மகாசேனன்

**டித்வா புயலுக்குப் பிறகு மலையகப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான பாதிப்புகள், மலையகத் தமிழர்களின் நிரந்தர பாதுகாப்பு, வாழ்வாதாரம், மற்றும் வடக்கு-கிழக்கு நோக்கிய குடியேற்றம் சாத்தியமா என்ற கேள்விகளை மீண்டும் தீவிரமாக எழுப்பியுள்ளது. இந்த நேர்காணலில், இந்த விவகாரத்தை வரலாறு, அரசியல், சமூக, பண்பாட்டுகோணங்களில் ஆய்வாளர் மகாசேனன் விரிவாக விளக்குகிறார்.**

**டித்வா புயலுக்குப் பிறகு மலையக மக்கள் மீண்டும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையை நீங்கள்எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

மலையக மக்கள் இயற்கை அனர்த்தங்களால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகிற சமூகமாகவே நீண்ட காலமாகஇருக்கிறார்கள். டித்வா புயல் என்பது ஒரு சம்பவம் மட்டுமே. உண்மையில், ஒவ்வொரு ஆண்டும் கனமழை, மண் சரிவு, போன்றவற்றால் மலையக மக்கள் உயிரிழப்பையும் சொத்திழப்பையும் சந்தித்து வருகிறார்கள்.

முழு இலங்கையும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டதாக சொல்லப்பட்டாலும், உண்மையில் அதிக சுமையைச் சந்தித்தவர்கள் மலையக மக்கள்தான். காரணம், அவர்கள் வாழும் இடங்களே இயல்பாக அபாயப் பகுதிகள். அரசுநிவாரணம் அறிவிக்கிறது; ஆனால் அந்த நிவாரணம் பெரும்பாலும் காணி மற்றும் வீடு உள்ளவர்களுக்கேசென்றடைகிறது. லயன் அறைகளிலும், காணியில்லாத நிலையில் வாழும் மலையக மக்களுக்கு அந்த நிவாரணங்கள் முழுமையாக சென்று சேருவதில்லை.

**மலையக மக்களின் பாதுகாப்பான வாழ்வு குறித்து கடந்த காலத்திலிருந்தே பேசப்படுகிறது. வடக்கு-கிழக்கு நோக்கியகுடியேற்றம் புதிய யோசனையா?**

இது எவ்விதத்திலும் புதிய யோசனை அல்ல. *1970*களிலிருந்தே மலையக மக்களின் பாதுகாப்பான எதிர்காலம் குறித்து ஈழத்தமிழர் அரசியல், சமூக வட்டாரங்களில் விவாதம் நடைபெற்று வருகிறது.

விடுதலைப் போராட்ட காலத்திலும், மலையக மக்களை வன்னி உள்ளிட்ட பகுதிகளில் குடியேற்ற வேண்டும் என்றசிந்தனைகள் முன் வைக்கப்பட்டன.

*1980*களுக்குப் பிறகு சில மனிதநேய இயக்கங்கள் மூலம் குடியேற்ற முயற்சிகள் நடைமுறையிலும் வந்துள்ளன.ஆகவே, டித்வா புயலுக்குப் பிறகு மீண்டும் இந்த விவாதம் எழுவது என்பது புதிய சிந்தனை அல்ல; பழைய, தீராத ஒருபிரச்சினை மீண்டும் மேலெழுந்துள்ளது என்பதே உண்மை.

**மனோ கணேசன், சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகளின் கருத்துகள் விமர்சனங்களை சந்திக்கின்றன. இதை நீங்கள்எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?**

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு ஐ.வி.மகாசேனன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை You-Tube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

இந்த அரசியல்வாதிகள் கூறும் கருத்துகள் மனிதநேய அடிப்படையில் சொல்லப்படுவது போல இருந்தாலும், அதில்அரசியல் நோக்கங்கள் கலந்துள்ளதா என்ற சந்தேகம் எழுவது இயல்பானது. குறிப்பாக தேர்தல் அரசியல், அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகள் போன்றவை இதில் கலந்திருக்கலாம். ஆனால் முக்கியமான கேள்விஅரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதல்ல. மலையக மக்கள் உண்மையில் என்ன விரும்புகிறார்கள்? அவர்கள் இடம்பெயர தயாராக உள்ளார்களா? என்பதே அடிப்படை கேள்வி. அந்த மக்களின் விருப்பம், அச்சம், எதிர்பார்ப்பு ஆகியவை கருத்தில் கொள்ளப்படாமல் எடுக்கப்படும் எந்த முடிவும் நீடித்த தீர்வாக இருக்காது.

**வடக்கு-கிழக்கு மக்களிடம் மலையக மக்களை ஏற்கும் மனநிலை உள்ளதா?**

பெரும்பான்மையான வடக்கு–கிழக்கு ஈழத் தமிழர்கள் மனிதநேய அடிப்படையில் இதற்கு எதிர்ப்பில்லை. ஒரே மொழி, ஒரே பண்பாட்டு பின்னணி கொண்ட இன்னொரு தமிழ் சமூகத்தை ஏற்றுக்கொள்வதில் அடிப்படைத் தடையில்லை.

மாறாக, இது அந்தப் பகுதிகளில் தமிழ் சமூகத்தின் எண்ணிக்கையையும் சமூக பாதுகாப்பையும் வலுப்படுத்தும் என்றபார்வையும் உள்ளது. எனினும், அரசு காணிகள், இராணுவ ஆக்கிரமிப்புகள், இன விகித மாற்ற முயற்சிகள் போன்றசூழலில், இந்த குடியேற்றம் தவறாக பயன்படுத்தப்படுமோ என்ற அச்சமும் வடக்கு–கிழக்கு மக்களிடம் உள்ளது.

**மலையக மக்கள் ஏன் நிரந்தரமாக இடம்பெயர வேண்டிய நிலை உருவாகிறது?**

மலையகப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான இடங்கள் மண் சரிவு அபாயப் பகுதிகளாக அரசின் பேரிடர் முகாமைத்துவஅமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே இடங்களில்தான் மக்கள் தொடர்ந்து வாழ்கிறார்கள்.

சாதாரண பருவமழையில்கூட உயிரிழப்புகள் நிகழ்கின்றன. தூங்கிக் கொண்டிருக்கும்போது மண் சரிந்து குடும்பமேஉயிரிழக்கும் சம்பவங்கள் ஆண்டுதோறும்நடக்கின்றன.இது ஒரு “அசாதாரண பேரிடர்” அல்ல; ஒரு தொடர்ச்சியானஅபாய வாழ்வு. ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பான, நிரந்தர இருப்பிடம் தேவை என்பது மனிதநேயக் கோரிக்கையாகமட்டுமல்ல, ஒரு அவசரத் தேவையாகவும் மாறியுள்ளது.

**மொழி மற்றும் பண்பாட்டு அடையாளம் தொடர்பான பிரச்சினைகள் மலையகத்தில் உள்ளனவா?**

ஆம், இது மிகவும் முக்கியமான பிரச்சினை. மலையகப் பகுதிகளில் அரசு அறிவிப்புகள் பெரும்பாலும் சிங்களமொழியில்தான் வழங்கப்படுகின்றன. பேரிடர் எச்சரிக்கைகள் கூட தமிழில் சரியாக வழங்கப்படுவதில்லை. இதனால், “சிங்களம் தெரிந்தால்தான் பாதுகாப்பு” என்ற மனநிலை உருவாகிறது.

பல மலையக இளைஞர்கள், தமிழ் அடையாளத்தைவிட சிங்கள மொழியைப் பாதுகாப்பு கருவியாக பார்க்கும்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இது நீண்ட காலத்தில் மலையகத் தமிழர்களின் மொழி மற்றும் பண்பாட்டு அடையாளம்அழிவதற்கான பாதை ஆகும்.

**அனைத்து மலையக மக்களும் வடக்கு-கிழக்கிற்கு வந்தால், மலையகப் பகுதிகளில் என்ன விளைவுகள் ஏற்படும்?**

இதையும் நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். மலையகத்திலிருந்து பெருமளவு

தொடர்ச்சி *11*ஆம் பக்கம்

# 7வது மாநாடு நடைபெறா விட்டால் 80 வது அகவையுடன் தமிழரசுக்கட்சி 2029ல் காணாமல் போகும்!

பா. அரியநேத்திரன்

இலங்கையில் 70 க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. அதில் நிரந்தர தலைவர், நிரந்தர பொதுச்செயலாளர் இல்லாத ஒரு கட்சி என்றால் அது இலங்கைத்தமிழ் அரசுக்கட்சிதான். கடந்த 2024 ஜனவரி 27 தொடக்கம் இன்று வரை ஏறக்குறைய இரண்டு வருடங்களாக பதில் பதவிகளுடன் இயங்கும் ஒரே ஒரு கட்சி இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மட்டுமே. இது ஆச்சரியமான உண்மை. கட்சி நிர்வாகத்தெரிவில் ஏற்பட்ட முரண்பாடுகாரணமாக இரண்டு நீதிமன்றங்களில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களாலேயே திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் இரண்டு வழக்குகள் இந்த கட்சிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டதுடன் இரண்டு அணிகளாகவும் தமிழரசுக் கட்சி பதில் பதவிகளுடன் இயங்குவதை காணலாம்.



2024, பொதுத்தேர்தலிலும், 2025 உள்ளூராட்சி தேர்தலிலும் வேட்பு மனுக்கள் பதில் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்டு இரண்டு தேர்தல்களுக்கு முகம்கொடுத்துள்ள போதிலும் அடுத்த பாராளுமன்ற தேர்தல் 2029ல் இடம் பெறுவதற்கு முன்னதாக நீதிமன்ற வழக்கில் இருந்து கட்சி விடுபட்டு 17வது தேசிய மகாநாடு நடத்தப்பட்டு அதில் புதிய நிர்வாகத்தெரிவு நிரந்தரமாக தெரிவு செய்யப்படாமல் தற்போதைய பதில் பதவிகளுடன் இயங்கினால் 2029ம் ஆண்டுடன் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி 80 வயதுடன் வடகிழக்கில் இருந்து காணாமல் போகும் நிலை ஏற்பட்டு வேறொரு தமிழ்தேசியகட்சி எழுச்சிபெறும் வாய்ப்பு வரும்.

பதில் தலைவர், பதில் பொதுச்செயலாளருடன் 2029 பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நிலை ஏற்படுமானால் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவியில் உள்ள சிலரும், தமிழரசுக்கட்சியில் உள்ள பலரும் வேட்பாளர்களாக போட்டியிட முன்வர மாட்டார்கள். அப்படியான அதிருப்தியாளர்கள் பலர் வடகிழக்கு தாயகத்தில் தமிழ்த்தேசிய கொள்கைப்பற்றாளர்கள் ஒன்றிணைந்து வேறு ஒரு தமிழ்த்தேசிய கட்சியை அல்லது புதியதொரு கட்சியை ஆரம்பித்து 2029 ல் பாராளுமன்ற தேர்தலை சந்திக்கும் வாய்பு ஏற்படும். அன்றே தமிழரசுக்கட்சியின் ஆயுள் முற்றுப்பெறும்.





மாகாணசபை தேர்தல் வடக்கிலும், கிழக்கிலும் அடுத்த ஆண்டு 2026 ல் நடைபெறலாம் என நம்பப்படுகிறது. அப்படி நடந்தால் அதற்கு இடையில் நீதிமன்ற வழக்கு முடிவுக்கு வராமல் மகாநாடு புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெறாமல் தொடர்ந்தும் தற்போதுள்ள பதில் பொதுச்செயலாளர் வேட்பு மனுக்களை வடக்கிலும், கிழக்கிலும் தமிழரசுக்கட்சி மூலமாக தாக்கல் செய்தாலும் சிதறி கிடக்கும் தமிழ்தேசிய கட்சிகள் ஒற்றுமையாக இணைந்தால் மட்டுமே தமிழரசுக்கட்சி மூலமாக கணிசமான ஆசனங்களை பெற வாய்புள்ளது. தனித்து தமிழரசுக்கட்சி போட்டியிட்டால் எதிர்பார்த்த ஆதரவை பெற முடியாத நிலைமையே உள்ளது.



அனைத்து தமிழ்த்தேசிய கட்சிகளும் இணைந்து தேர்தலில் ஒரு சின்னத்தில் போட்டியிடுவதற்கும் சேர்ந்து இயங்குவதற்குமான சந்திப்புக்களும், பேச்சுவார்த்தைகளும் தற்போது இடம்பெறுவதை காணமுடிகிறது இந்த முயற்சி வெற்றிபெற பல தடைகளை தாண்டவேண்டியுள்ளது. அரசியல் தீர்வு விடயம், மக்களை தேசமாக கட்டி எழுப்பும் விடயம் ஏனைய பொது விடயங்களுடன் தேர்தல் கூட்டு என்பன சகல கட்சிகளும் விட்டுக்கொடுப்புடன் ஒரு கொள்கை அடிப்படையில்ஒற்றுமையாகஇணைந்துஅரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய கட்டாயம் ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

அதேவேளை மாகாணசபை தேர்தலில் அனைத்து தமிழ்த்தேசிய கட்சிகளும் ஒருமித்து தமிழரசு கட்சியில் வேட்பாளர்களை நியமித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். இல்லை எனில் எதிர்பார்த்த ஆசனங்களை எந்த ஒரு கட்சியும் பெறவாய்பில்லை. பல கட்சிகளின் கூட்டாகவே மாகாணசபை ஆட்சியமையும் சூழல் உண்டு. தமிழ்தேசிய கட்சிகள் பிரிந்து தேர்தலில் போட்டியிட்டால் அது ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பாக மாறும். இந்த உண்மையை தமிழ் மக்கள் உணர்ந்தாலும் சில தமிழ் தலைவர்கள் உணரவில்லை.

கடந்த 2024 ஜனாதிபதி தேர்தலில் வடகிழக்கு தமிழ் மக்களுடைய கொள்கையை உறுதி செய்யவே தமிழ் பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் ( நான்) சுயேட்சையாக சங்கு சின்னத்தில் போட்டியிட்டவேளை ஏழு தமிழ் தேசிய கட்சிகள் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்த வரலாறு உண்டு. ஆனால் அதிலும் வேண்டுமென தமிழ் பொதுவேட்பாளரை தோல்வியுற செய்ய இலங்கை தமிழரசுக்கட்சியில் உள்ள ஒரு குழு ஜனநாயக மக்கள் சக்தி வேட்பாளர் சஜீத்திடம் சலுகைகளைப்பெற்று அவரை கருவியாக பாவித்து எந்த பொது அரசில் கொள்கையும் இன்றி ஆதரித்து பிரசாரம் செய்தது மட்டும் இன்றி அதே குழுவினர் தமிழரசுக்கட்சி ஆயுள்கால உறுப்பினராகவும், மத்தியகுழு உறுப்பினராகவும், மட்டக்களப்பு தொகுதி, பட்டிருப்பு தொகுதி, பட்டிப்பளை பிரதேச கிளைகளின் உபதலைவராகவும் உள்ள பா.அரியநேத்திரனுக்கு எதிராக விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பினர். அவர் வழங்கிய விளக்கத்துக்கு பதில் வழங்காமல் அவரை கூட்டங்களுக்கு அழைக்காமல் ஓரம் கட்டப்படுவதை காணலாம். ஆனால் தமிழரசுக்கட்சி அரியநேத்திரனை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்து பிரசாரம் செய்த ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணியுடன் இணைந்து தற்போது கூட்டுச்சேர்வதற்கு தமிழரசுக்கட்சியினர் சம்மதித்துள்ளதை காணமுடிகிறது.

'அரசியலில் நண்பனும் பகைவனாவான். பகைவனும் நண்பனாவான்' என்பது உண்மை. ஆனால் தமிழ் பொதுவேட்பாளரான அரியநேத்திரனை பகைவனாகவே தமிழரசுக்கட்சி பார்பதுதான் வேடிக்கை.



கடந்த 1994 தொடக்கம் 2024 வரையும் ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு எதிராக செயல்பட்ட மு.சந்திரகுமார் தற்போது கிளிநொச்சியில் சமத்துவ கட்சி எனும் பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார். அவரும் தற்போது ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணியுடன் இணைந்து இலங்கை தமிழரசுக்கட்சியுடன் பேச்சுவார்தையில் கலந்து கொண்டுள்ளார். எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் வடமாகாணத்தில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியுடன் தமிழரசுக்கட்சியும் இணைந்து தேர்தலை சந்தித்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் சந்திரகுமாரின் சமத்துவக்கட்சிக்கு வேட்பாளர் இடம் கொடுக்கும்போது கிளிநொச்சியில் மாவட்ட தமிழரசுக்கட்சி தலைவர் சி.சிறிதரன் அதனை ஏற்பாரா என்பது கேள்விக்குறியே.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடந்த 2010 தொடக்கம் தற்போது வரை இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை பலமான மக்கள் அமைப்பாகவும், இளைஞர், மகளீர்அமைப்புகளை தமிழ்தேசிய கொள்கையுடன்வழிநடத்தி வருபவர்,

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



கின்னியான்

# தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றுமிக்க கன்னியா பாதுகாக்கப்படுமா?

தமிழர்களின் வரலாற்றுமிக்க பூமியாக காணப்பட்ட திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றும் அதன் வளாகத்தில் உள்ள இந்து கோயில்களும் தற்போது ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

இலங்காபுரி வேந்தன் இராவணனுடன் தொடர்புபட்டதும் ஆன்மீக உலகின் அதிசயம் எனப் போற்றப்படும் ஏழு வெந்நீருற்றுக்களை கொண்டதும் தட்ஷன கைலாச புராணம் வீரசிங்கா புராணம், திருகோணாசல புராணம் போன்ற பல்வேறு புராணங்களில் விதந்துரைக்கப்பட்ட பெருமை கொண்டதும் அகத்தியமாமுனியின் மனம் கவர்ந்த புண்ணிய தலங்களைக் கொண்டதுமான கன்னியா கிராமம் தமிழர் தாயகத்தின் பூமி என இருந்து வருகின்றது.

ஆனாலும் தற்போதைய சூழ் நிலையில் தொல்பொருள் என்ற போர்வையிலும் பௌத்த மயமாக்கலின் ஆதிக்கமும் சைவத்தமிழர்களின் மத அனுஷ்டானங்களை அங்குள்ள கோயில்களில் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


பௌத்தமயமாக்கல் மூலமாக அங்குள்ள பகுதியில் புத்தர் சிலையை நிறுவி தமிழர்களின் அடையாளத்துக்கு கூறுபோடும் நிலை உருவாகியுள்ளது.



குறித்த வெந்நீரூற்றுப் பகுதியில் ஏற்கனவே சிறியளவில் புத்தர் மடத்தினை கட்டினர். அப்போது தமிழர்கள் பெருமளவில் எதிர்ப்புக்களை வெளியிட்டனர். ஆனாலும் அங்கு புத்தர் சிலையை, நிறுவ அரசு அனுமதியளித்தது. அத்தோடு இலங்கையின் மாமன்னன் இராவணனோடு தொடர்புடைய வரலாறுகளும் அழிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் தற்போது புதிதாக பெரிய புத்தர் சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இங்கு பல மதச் சடங்குகளை நடத்தி வழிபாட்டில் ஈடுபடக் கூடிய நிலை இருந்த போதிலும் அந்த நிலையும் இங்கு இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளது.



இறந்தவர்களுக்கான பிதிர்கடன் செய்யும் இடமாகவும் இருந்த கன்னியா பகுதியில் அண்மையில் இந்நிகழ்வைச் செய்ய முடியாது பல்வேறு தடைகளை ஏற்படுத்திய வரலாறுகளும் உண்டு. மதச் சுதந்திரம் இந்த நாட்டில் எல்லா மதங்களுக்கும் சமம் என கூறுகின்ற போதும் எந்த அரசாங்கமும் முழுமையான சுதந்திரத்தை தமிழர்களுக்கு வழங்கவில்லை என்றே கூற முடியும்.

இவ்வாறான நிலையில் அங்குள்ள சைவ கோயில்களுக்கு சென்று மதக் கடமைகளை செய்ய முடியாது பௌத்த ஆதிக்கம் உள்ளது.

குறித்த கன்னியா கிராமம். திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட குறித்த பகுதி சுற்றுலாப் பிரதேசம் என வும் தொல்பொருள் என்ற போர்வையிலும் தொல்பொருள் திணைக்களம் ஊடாக பராமரிக்கப்பட்டு உள் நுழைவு டிக்கட்டுக்களை அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளனர்.

ஆனால் இது உப்புவெளி பிரதேச சபைக்கே சொந்தமானதாகவும் அதன் கீழ் தான் பராமரிப்பும் இடம் பெற வேண்டும்.

இது குறித்து திருகோணமலை தென்கையிலை ஆதீனத்தின் குரு அகத்தியர் அடிகளார் தெரிவிக்கையில் “ கன்னியா யாருடையது யாருடன் சம்மந்தப்பட்டது அதன் சூழ் நிலைமை என்பது எல்லோருக்கும் தெரியும்.

சைவத்துடனும்,தமிழுடனும் உள்ள தொடர்பும் எல்லோருக்கும் தெரியும். எல்லாம் தெரிந்தும் இப்படியான விடயங்கள் நடந்து கொண்டிருக்கிறது. இதனை தனிப்பட்ட முறையில் யாரும் எதுவும் செய்ய முடியாது. சைவ சமூகம் மற்றும் தமிழ் சமூகம் சேர்ந்து தான் இதனை மீட்டெடுக்க முன்வர வேண்டும். அதற்கு தலைமை தாங்கும் தலைமைத்துவம் இது சம்மந்தமாக சிந்திக்கின்றதா என்பது பற்றி தெரியாது. சிந்தித்து இதனை வென்றெடுக்க என்ன செய்யலாம் என்பது பற்றியும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். யாருடன் அணுக வேண்டும். எப்படி அணுக வேண்டும் என்பதை அரசியல் தலைமை தீர்மானிக்க வேண்டும்.



இது பற்றியதான தீர்மானங்களை எடுப்பதாக எதுவும் தெரியவில்லை.கட்டாயமாக இதனை மீட்க முன்னெடுப்புக்களை செய்ய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மறுக்கமுடியாத சுயநிர்ணய உரிமையைக் களைய முனையும் கூட்டாட்சிக் கோரிக்கை

ஈழத்தமிழர் தேசம் மீது நீட்சியான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு (protracted structural genocide) நுட்பமான வழிகளில் தொடரப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படுவது மட்டுமல்ல, குரூரமான சரீர இன அழிப்பு மீளவும் நிகழாது தடுக்கப்படுவதும் (nonrecurrence of physical genocide) ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணா சுயநிர்ணய உரிமை (inalienable right of self-determination) ஒத்துக்கொள்ளப்பட்ட அரசியற் தீர்வு மூலம் மட்டுமே இயலுமாகும். ஆனால், தாயகம், தேசியம், இறைமை, சுயநிர்ணயம் போன்ற சொற்களை வெற்றுக் கூப்பாடுகளாகக் கையாளுவதில் தேர்ச்சி பெற்றுள்ள தேர்தல் அரசியற் கட்சிகள் ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையைக் கூட்டாட்சிக் (federation) கோரிக்கை மூலம் களைந்துவிடும் 'அரசியல் முள்ளிவாய்க்காலை' அரங்கேற்றிவருகின்றன. ஒரு புறம் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற குழிபறிப்பும் மறுபுறம் 'கூட்டாட்சி' என்ற கூப்பாடும் ஈழத் தமிழ்த் தேசிய விடுதலைக்கான பயணத்தைத் தடுமாறவைத்துத் துண்டாட எத்தனிக்கின்றன.



போதாக்குறைக்கு ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்குத் தமிழ் நாட்டில் நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் 'பொதுவாக்கெடுப்பு' என்ற கோரிக்கையைக் 'கூட்டாட்சி' (சமஷ்டி) என்பதாகப் படிநிலை இறக்கம் செய்யும் பெருந்தவறுக்கு அடித்தளமிடும் அறிகுறியும் தென்படுகிறது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கும் அதன் வழியில் தற்போதைய கோரிக்கை வடிவமாயுள்ள பொதுவாக்கெடுப்பு என்பதற்கும் முரண்படாமல் கூட்டாட்சிக் கோரிக்கையை தமிழர் தரப்பு முன்வைக்க இயலுமா என்றால், இயலாது என்ற பதிலே கிடைக்கிறது.

இதை விளங்கிக்கொள்வதற்கு வட்டுக் கோட்டைத் தீர்மானத்துக்கும் திம்புக் கோட்பாடுகளுக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை விளங்கிக்கொண்டிருத்தல் வேண்டும்.

ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணா (inalienable) சுயநிர்ணய உரிமையின் மரபு என்ன என்பதை விளங்கிக்கொண்டாலே இதை மட்டுமல்ல வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் விளங்கிக் கொள்ள இயலும்.

'சுயநிர்ணயம்' என்ற பதம் வடசொல்லாக அமைந்திருப்பதால் அதைத் தூயதமிழில் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தில் தன்னாட்சி என்ற சொல்லை அதற்கு ஈடாகப் பயன்படுத்துவது தவறாகும்.

தன்னாட்சி (self-rule) வேறு, சுயநிர்ணயம் (self-determination) வேறு.

1985 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்ட இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்து முன்வைத்த திம்புக்கோட்பாடுகள் நான்கு அடிப்படைகளை இந்திய அரசுக்கு ஈழத் தமிழர் விடுதலை அரசியலின் "நெகிழ்ச்சித் தன்மையின்" எல்லைகளைச் சுட்டிக்காட்டுவனவாக அமைந்திருந்தன.

**அவையாவன:**

1 **இலங்கையில் தமிழர்கள் தனித்துவமான தேசிய இனம் என்பதை அங்கீகரிக்கவேண்டும்.** ***(Recognition of the Tamils of Sri Lanka as a distinct nationality)***

2 **இலங்கையில் ஓர் அடையாளப்படுத்தப்பட்ட தமிழ்த் தாயகம் இருக்கிறதென்பதை அங்கீகரித்து, அதன் ஆட்சிப்புல ஒருமைப்பாட்டுக்கு உத்தரவாதமளிக்கவேண்டும்** ***(Recognition of an identified Tamil homeland and the guarantee of its territorial integrity)***

3 **மேலே கூறப்பட்டதன் அடிப்படையில், தமிழ்த் தேசத்தின் களையவொண்ணா சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும்** ***(Based on the above, recognition of the inalienable right of self-determination of the Tamil nation)***

4 **இலங்கைத் தீவைத் தமது நாடாகக் கருதும் அனைத்து தமிழர்களது முழுமையான பிரஜாவுரிமையையும் ஏனைய அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் அங்கீகரிக்கவேண்டும்** ***(Recognition of the right to full citizenship and other fundamental democrtic rights of all Tamils, who look upon the island as their country).***

மேற்குறித்த கோட்பாடுகளில் முதலாவதில் பொருட்பிழை தரும் ஒரு சொற்பிழை இருக்கிறது.

இந்தக் கோட்பாட்டை வாசித்த இலங்கை அரசின் தலைமைப் பிரதிநிதி ஹெக்டர் ஜெயவர்த்தனா அந்தச் சொற்பிழையைத் தனது வாதத்துக்குச் சார்பாக எடுத்து வாதிட்டார்.

அப்போது தமிழர் தரப்பு அதன் உண்மையான அர்த்தத்தை கூட்டத்தொடரில் தெளிவுபடுத்தவேண்டியிருந்தது.

அதாவது, nation என்பது வேறு nationality என்பது வேறு அர்த்தமுடையது என்பதே அந்தச் சொற்சிக்கல்.

முன்னையதன் பொருளிலேயே பின்னைய சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற தெளிவை அங்கு தமிழர் தரப்பினர் தமது உரைகளில் சுட்டிக் காட்டவேண்டிய இக்கட்டான சூழல் ஏற்பட்டது. தவிரவும் மூன்றாம் கோட்பாட்டில் குறித்த சொல் சரியாகக் கையாளப்பட்டிருந்தது.

முதலாம் அமர்வில் (தமிழ்த் தரப்பு சட்ட ஆலோசகர் நடேசன் சத்தியேந்திரா கலந்து கொள்ள முன்னர்) திம்புக்கோட்பாடுகள் எழுதப்பட்டபோது அங்கே தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்தரணிகள் இருந்த போதும் குறித்த சொல்லை முதலாம் கோட்பாட்டில் தவறவிட்டிருந்தனர்.

திம்புக் கோட்பாடுகளில் நான்காவது மட்டும் (மலையக மக்களுக்கான பிரஜாவுரிமை) 1995 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

மூன்றாந் தரப்பு அல்லது இலங்கை அரச தரப்பு ஒரு தீர்வை முன்வைக்க முன்வருகிறதென்றால், அது எந்த அடிப்படைகளை நிவர்த்தி செய்தால், வட்டுக்கோட்டை நிலைப்பாட்டை மறுதலிக்காமல் அதைத் தமிழர் தரப்பு பரிசீலிக்க இயலுமா இல்லையா என்பதைச் சுட்டுவதற்கானவையே திம்புக் கோட்பாடுகள்.

இதனாற் தான் திம்புக் கோட்பாடுகளை நெகிழ்ச்சித் தன்மைக்குரிய கோட்பாடுகளாகத் தெரிந்து, தேவைப்படும் போது பேச்சுவார்த்தை மேசையில் மட்டுப்படுத்திக் கையாளுவது தமிழ்த் தரப்பின் வழக்கமாயிருந்தது.

திம்புக் கோட்பாடுகள் எங்களுக்கானவை அல்ல. வெளிச்சக்திகளுக்கானவை அல்லது சிங்கள தேசத்துக்கானவை. காப்பரணுக்கான கோட்பாடுகள் அவை.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் 1985 திம்புக் கோட்பாடுகளை மறுதலித்த ஒன்று.

வரலாற்றுத் தாயகத்தையோ பாரம்பரியத் தாயகத்தையோ ஒப்புக்கொள்ளாமல், தமிழர் தாயகத் தின் ஆட்சிப்புல ஒருமைப்பாட்டை நிராகரித்து (கிழக்கில் மட்டும் பொதுவாக்கெடுப்பு, தற்காலிக இணைப்பு), வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள்(கள்) ஏனைய மக்களோடு வரலாற்று வாழிடமாகப் (areas of historical habitation) பயன்படுத்திய ஒரு பகுதி என்பதை மட்டுமே தெரிவிக்கின்றது. (உடன்படிக்கையை எழுதியது காமினி திசநாயகாவும் டிக்சிற்றும்.)

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட 13 ஆம் திருத்தம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கை விட குறுகியதாக அமைந்தது. அது இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகளில் சில தாக்கங்களை ஏற்படுத்தினாலும் நடைமுறையில் எதையும் பெரிதாகச் சாதிக்கவில்லை.

அதையும் நிராகரிக்கும் போக்கில் இலங்கை அரசு இருப்பதானது உள்ளார்ந்த சுயநிர்ண யத்தை அது நிராகரிப்பதற்கான இன்னும் ஓர் எடுத்துக்காட்டு.



அரசியல் விடுதலைக்கான நிலைப்பாடுகளை முன்வைக்கும் போது, குறைந்த பட்சக் கோரிக்கைகள் என்றும் உயர்ந்த பட்சக் கோரிக்கைகள் என்றும் அவற்றை முன்வைப்பது தவறு.

நெகிழ்ச்சிக்கான எல்லைகள் எவை என்பதைக் குறிப்பிட திம்புக் கோட்பாடுகளும், அதேவேளை எமது நிலைப்பாடும் கோட்பாடும் எது என்பதைக் குறிப்பிட வட்டுக்கோட்டைத் தீர்மானமும் அது சார்ந்த மக்களாணைக்குரிய விஞ்ஞாபனமும் விளங்குகின்றன. முள்ளிவாய்க்காலில் கோட்பாட்டைச் சரணாகதியாக்காத போராட்ட மரபும் இத்தோடு இணைத்துப் பார்க்கப்பட வேண்டியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபை முன்வைத்தபோது அதிலே திம்புக் கோட்பாடுகளை எடுத்தாளாமற் தவிர்த்து, வட்டுக்கோட்டையை மட்டுமே குறிப்பிட்டிருந்தார்கள் என்பதும் இங்கே குறிப்பாக நோக்கவேண்டியது.

வட்டுக்கோட்டை நிலைப்பாட்டில் இருந்து வழுவிச் செல்வோர் களையவொண்ணா என்ற பதமற்ற 'வெறும்' சுயநிர்ணய உரிமை என்பதைக் கூட்டாட்சி என்பதோடு சேர்த்துக் குழப்புவது மட்டுமல்ல, ஏதோ ஐ.நா. மன்றத்தின் சாசனங்களுக்குள் மட்டுப்படுத்தப்படு முடக்கப்பட்டுச் சிக்கித் தவிக்கும் சுயநிர்ணய உரிமையைத் தான் தாம் கோருவதாகவும் காட்டிக்கொள்வார்கள்.

கேள்வி கேட்டால், 'அது' தான் 'இது' என்றும், 'இது' தான் 'அது' என்றும் விதண்டாவாதம் பேசி மக்களைக் குழப்புவார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழக சட்டசபையில் மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 08 ஜூன் 2011, 27 மார்ச் 2013, 24 ஒக்டோபர் 2013,

தொடர்ச்சி 09 ஆம் பக்கம்

**மறுக்கமுடியாத ... தொடர்ச்சி ...**

*16 செப்டம்பர் 2015* ஆகிய நான்கு தடவைகள் கொண்டுவந்து, சட்டசபை அமர்விற் பங்கேற்ற அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றிய நான்கு தீர்மானங்களின் மூன்று வலுவான கோரிக்கைகளாகப் பின்வருபவற்றைப் பார்க்கலாம்:

1 **இன அழிப்புத் தொடர்பான பன்னாட்டு புலன்விசாரணையும் ஏனைய சர்வதேசக் குற்றங்களோடு தவறாது மேற்கொள்ளப்பட வேண்டும்;**

2 **இலங்கை அரசு தமிழர்களுக்கெதிரான அடக்கு முறையைக் கைவிடும் வரை அதற்குப் பொருளாதார உதவிகளை மேற்கொள்ளக்கூடாது, இந்திய அரசு அதை நட்பு நாடு என்று அழைக்கக் கூடாது;**

3 **தனி ஈழத்திற்கான பொதுவாக்கெடுப்பு ஐ.நா. மேற்பார்வையில் தாயகத்திலும் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மேற்கொள்ளப்படவேண்டும்.**

சுருங்கக்கூறினால், தமிழ்நாடு தெரிந்திருக்க வேண்டிய ஈழத்தமிழர் நிலைப்பாடு தொடர்பான சமன்பாடு பின்வருமாறு:

1 **ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணாச் சுயநிர்ணய உரிமை மரபு +**

2 **1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் +**

3 **1977 தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம் +**

4 **திம்புக்கோட்பாடுகளில் முதல் மூன்று +**

5 **தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்ட வரைபு +**

6 **தமிழக சட்டசபையின் தலையாய மூன்று கோரிக்கைகள்.**

இவற்றைத் தவிர ஈழத்தில் இருந்தோ, புலம்பெயர் சூழலில் இருந்தோ எவரும் எதுவும் தமிழ்நாட்டுக்குப் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை.



களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதற்கும் வெறுமனே சுயநிர்ணய உரிமை என்பதற்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது.

சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அமையும் ஆட்சிமுறைத் தீர்வுகளாக மூன்று வெவ்வேறு வகைப் பாதைகள் உள்ளன:

1 'உள்ளார்ந்த சுயநிர்ணய' பாதை என்ற மொழி, பண்பாட்டு அல்லது பிரதேச சுயாட்சி (ஆம், பதின்மூன்றாவது என்று பேசி முரண்பட்டுக் கொள்கிறார்களே, அதுவும் இதற்குள் தான், வெறும் சுயநிர்ணய கூட்டாட்சியும் இதற்குள் தான்)

2 படிநிலைப் பாதை என்ற பொதுவாக்கெடுப்பை உள்ளடக்கிய பாதை

3 இறைமையும் சுதந்திரமும் கொண்ட தனிநாடு அமைக்கும் பாதை.

கூட்டாட்சி பொதுவாக முதலாவது பாதையைப் பற்றியதாகவே அமையும். மிக அருமையான விதிவிலக்காக மட்டுமே அது இரண்டாவது பாதையைச் சகித்துக் கொள்ளும்.

இரண்டாவதும் மூன்றாவதும் களையவொண்ணாச் சுயநிர்ணய உரிமைக்குரிய பாதைகள். மூன்றாவதான பிரிவினையைக் கூட்டாட்சி அங்கீகரிக்காது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, மேற்குறித்த மூன்று பாதைகளில் மூன்றாவது பாதை தடைப்பட்டுவிட்டதாகவும் அதனால் முதலாவது அல்லது இரண்டாவது பாதைகள் பற்றியே இனிமேல் சிந்திக்கலாம் என்றும் பலர் நினைக்கிறார்கள்.

இதனாற் கூட்டாட்சி பற்றி அதிகமாகப் பேசிக்கொள்கிறார்கள். அப்படிப் பேசும்போது இரண்டாவது படிநிலைப் பாதையைக் கைவிட்டுவிட்டு முதலாவது பாதைத் தெரிவுக்குள் திசை தெரியாது திரும்பிவிடுகிறார்கள்.

இவ்வாறு தடங்காமல் பயணிப்பதற்கு கூட்டாட்சி என்ற பொதுவான சொல்லாடலுக்குப் பதிலாக இணைப்பாட்சி என்ற ஆட்சிவடிவத்தைத் தெளிவாக முன்வைக்கும் பதத்தைப் பயன்படுத்தியிருந்தால் இந்தச் சிக்கல் எழுந்திருக்காது.

இரண்டாம் பாதைக்குரிய நுழைவுச்சீட்டை ஐயந்திரிபற உறுதிசெய்துகொள்வது இணைப்பாட்சி *(confederation)* என்ற வழிமுறை மட்டுமே என்பதைப் பலர் அறியாதவர்களாக உள்ளார்கள்.



கூட்டாட்சி என்று கூவிக்கொண்டு இணைப்பாட்சிக்குக் கிட்டச் செல்லமுடியும் என்று வாதிடுவோருக்கு, "செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமையானுங் கெடும்" என்ற திருக்குறளையே நினைவுபடுத்தவேண்டும்.

இணைப்பாட்சியாக அரசியல் தீர்வு அமையாது கூட்டாட்சியாக அமையுமெனின், கூட்டாட்சியிலிருந்து விலகுவதற்கான படிமுறையைக் குறிப்பிடும் சிறப்பான உறுப்புரை அரசியலமைப்பு உறுப்புரைகளில் முற்கூட்டியே தெளிவாக வகுக்கப்பட்டிருக்கவேண்டும்.

இல்லையென்றால், சட்டவாக்கம் ஒன்றைச் சிறப்பாக உருவாக்கும் வாய்ப்பு இருக்கவேண்டும். இவ்வாறான உறுப்புரையோ சட்டவாக்கமோ இலங்கையில் ஒருபோதும் சாத்தியமற்றவை என்பது கண்கூடு.

ஆதலால், கூட்டாட்சி என்று கதைப்பதே தவறு. இணைப்பாட்சி என்பது ஓர் ஆட்சி முறை மட்டுமல்ல, அது ஒரு பயணம் அல்லது வாகனம் போன்றது.

பல ஆண்டுகள் இணைந்திருந்த பின் அது தனிநாட்டை நோக்கியோ அல்லது சாதாரண கூட்டாட்சியை நோக்கியோ நடைமுறையில் பயணித்துவிடலாம்.

இணைப்பாட்சியாகஆரம்பித்துகூட்டாட்சியாகக் காலப்போக்கில் மாறிவிட்டதற்கான எடுத்துக்காட்டுகளாக சுவிற்சர்லாந்து நாட்டையும் ஜேர்மனியையும் குறிப்பிடலாம்.

காலனித்துவம் முற்றுப்பெறாத நிலையிலுள்ள அல்லது உள்ளார்ந்த சுயநிர்ணயப் பாதை பலகாலமாக மறுக்கப்பட்ட, அன்றேல் பெருங்கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ள சூழலில் இணைப்பாட்சியானது, பரீட்சார்த்தமாகத் தற்காலிகமாக இணைந்து வாழ்ந்து, ஒருவருக்கொருவர் கெடுதல் இன்றி வாழ்வதற்கான ஒரு பரிசோதனையை மேற்கொண்டு, காலப்போக்கில் அடுத்த படிநிலையை அடைய இடமளிக்கிறது.

இந்த நியாயத்தின் படி இரண்டாம் வகையான சுயநிர்ணயப் பாதையை வலியுறுத்துவது பொருத்தமானது. இணைப்பாட்சி என்று இலங்கையில் இருக்கும் கட்சிகள் அரசியற் தீர்வைக் கோருமானால் களையவொண்ணா சுயநிர்ணயத்தையோ, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையோ திம்புக் கோட்பாடுகளையோ அது நிராகரிக்காத போக்காக அமையும்.

மாறாக, கூட்டாட்சி என்று பேச ஆரம்பித்த உடனேயே பொதுவாக்கெடுப்பு என்பதை நிராகரிக்கும் ஒவ்வாமைப் போக்கு ஏற்பட்டுவிடும்.

ஈழத்தமிழர் தேசிய இனம் காலனித்துவம் முற்றுப்பெறாத நிலையில் இருந்தவாறு ஒரு போராட்டத்தை நடாத்தும் தேசிய இனம் (தேசம்) என்பதை வட்டுக்கோட்டைத் தீர்மானம் தெளிவுபடுத்தியிருந்தது.

காலனித்துவ நீக்கத்துக்குரிய சூழமைவுக்குள் *(decolonisation context)* வைத்துக் கையாளப்படவேண்டியது ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை என்பதால் அது களையவொண்ணா சுயநிர்ணய உரிமை *(inalienable right of self-determination)* என்ற நியாயப்பாட்டைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இதனால், ஐ.நா.வின் வரைபுகளுக்கு முற்பட்ட சுயநிர்ணய உரிமை வரைவிலக்கணத்துக்கு உரியதாகவும் அது திகழ்கிறது.

ஆகவே ஈழத்தமிழர் தேசத்தின் களையவொண்ணா சுயநிர்ணய உரிமையின் மரபை ஈழத் தமிழ்த் தேசிய விடுதலை அரசியலில் ஈடுபடுவோர் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

இலங்கையின் தவறான சுதந்திரத்துக்கு ஒத்துழைத்துவிட்டுத் தனது வரலாற்றுத் தவறை உணர்ந்து திருத்திக்கொண்டது மட்டுமன்றி தமிழீழக் கோரிக்கையை முதன் முதல் முன்வைத்தவர் 'அடங்காத் தமிழன்' செ. சுந்தரலிங்கம் ஆவார்.



சுந்தரலிங்கம் தனது கொள்கையைத் தந்தை செல்வாவுக்கும் நெடுங்காலம் முன்னரேமிகத்தெளிவாக வரை யறுத்து முன் வைத்திருந்தார். தாயகக் கோட்பாட்டையும் ஈழத் தமிழர்கள் சிறுபான்மை அல்ல என்பதையும் அவர் வரையறுத்தார்.

தந்தை செல்வா கூட்டாட்சிக் கோரிக்கையை முன் வைத்து வந்த காலத்திலேயே அது தவறு என்று சுந்தரலிங்கம் அதை மறுதலித்துவந்தார்.

*1950*களின் இறுதியிலே தமிழீழத்தின் வரைபடத்தை முன்வைத்த அவர் அதையொட்டி தமிழீழத்தின் முதலாவது தேசியகீதத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் யாத்திருந்தார்.

இருந்தபோதும், சுந்தரலிங்கம் சாதியத்தை நியாயப்படுத்திய கோளாற்றால் பீடிக்கப்பட்டிருந்தமையால் அவர் தமிழீழக் கோட்பாட்டின் தந்தையாகப் பொதுவெளியில் அங்கீகரிக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டது.

இருப்பினும், அவரே தமிழீழக் கோட்பாட்டின் மூலம் என்பது ஈழத்தமிழர் தேச விடுதலைக்கான அரசறிவியலில் வரலாற்று மாணவர்கள் அறிந்திருக்கும் மறுக்கவியலாத உண்மை.

கூட்டாட்சிக் கூத்தாடிகளால் இன்றும் தேடிப் படிக்கப்படவேண்டியவர் சுந்தரலிங்கம்.

தமிழீழக் கோட்பாடு முன்வைக்கப்பட்டுப் பத்து ஆண்டுகளின் பின்னர், தந்தை செல்வா கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்து வந்திருந்த காலப்பகுதியான *1968* ஆம் ஆண்டில், தமிழரசுக் கட்சியின் மூளை என்று அறியப்பட்ட வ. நவரத்தினம் தனித்துவமான இறைமைக் கோட்பாட்டை வலியுறுத்தியதால் கூட்டாட்சிக் கட்சி *(Federal Party)* என்று ஆங்கிலத்தில் அப்போது அறியப்பட்டிருந்த தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறி சுயாட்சிக் கழகம் அமைக்கவேண்டிய ஒவ்வாநிலை ஏற்பட்டது.

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**

**மறுக்கமுடியாத ... தொடர்ச்சி ...**

இவரே தேசியத் தலைவர் பிரபாகரனின் இளவயதில் அவருக்கு அரசியல் வழிகாட்டியான வேணுகோபால் ஆசிரியரின் தலைவர் ஆவார்.

இவ்வாறானோரால் வரையறுக்கப்பட்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலும் 1977 மக்களாணை பெற்ற தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெளிவுபடுத்தப்பட்டதே களையவொண்ணா சுயநிர்ணய உரிமை.

1947 இல் சோல்பரி அரசியலமைப்பு தமிழர் விருப்புக்கு மாறாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து 'ஐம்பதுக்கைம்பது' கோரிக்கையை முன்வைத்து, பின்னர் அந்த அரசியலமைப்பு நிறைவேற்றப்பட முன்னரே சுயநிர்ணய உரிமைக்கான நியாயப்பாடு உண்டென்பதை பிரித்தானிய மகாராணியாருக்கு நினைவுபடுத்தித் தந்தி அனுப்பிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் - செல்வா தமிழ் காங்கிரசில் இருந்து பிரிவதற்கு முன்னான காலத்தில் - அதாவது இலங்கைச் 'சுதந்திரத்துக்கு' முன்பே, 'சுயநிர்ணய உரிமை' பற்றிய நியாயப்பாட்டைக் குறிப்பிட்டிருந்தார் என்பதையும் இங்கே பார்க்கவேண்டும்.

ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கும் முன்பே சேர் பொன் அருணாச்சலம் தமிழ் அரசியல் அடையாளத்தையும் மக்கள் தனித்துவத்தையும் அரசியலமைப்புச் சமத்துவத்தையும் கோரியிருந்தாலும் தமிழீழம் என்பதற்கோ சுயநிர்ணய உரிமைக் கருத்தியலுக்கோ அடித்தளம் இட்டிருக்கவில்லை.

ஆக, களையவொண்ணாச் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தெளிவாகச் செதுக்கிய சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகிய இருவரின் அடித்தளக் கொள்கைகளே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் அதன் தொடர்ச்சியான பொதுவாக் கெடுப்புக் கோரிக்கையையும் கோட் பாட்டு ரீதியாகத் தீர்மானித்தன.

நடைமுறையில் அக்காலத்து இளந்தலைமுறையின் ஆயுதப் போராட்ட முனைப்பு வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கான அழுத்தத்தைத்தாராளமாகஏற்படுத்தியிருந்தது. கோட்பாடும் நடைமுறையும் இணையாமல் போராட்டம் இல்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகியோரின் ஆங்கில மூல எழுத்துக்களை அடியொற்றியே பின்வந்த தத்துவாசிரியர்கள் ஆயினும் எழுத்தாளர்கள் ஆயினும் தமது ஆங்கிலப் புலமையைப் படியெடுத்துப் பயன்படுத்தினார்கள். படியெடுக்கையில் அறிந்தோ அறியாமலோ தவறுகளை இழைத்தார்கள். இழைத்த தவறுகளில் இருந்து அவர்கள் தம்மைத் தாமே மீட்டுக்கொள்ள களையவொண்ணா சுயநிர்ணய மரபில் வந்த நேர்த்தியான தேசியத்தலைவர் காரணமாயினார்.

ஆதலால், ஆங்கிலப் பிரதிகளை விட ஆங்கில மூலங்களைப் படிப்பது அரசியற் தீர்வு குறித்த எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு இன்றியமையாதது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து அளப்பரிய அர்ப்பணிப்புகளோடு அடுத்த கட்ட இளந்தலைமுறையால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் அடிப்படையான களைய வொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதை முள்ளிவாய்க்கால் வரை சாவு வரினும் இறைமையைச் சரணாகதியடைதலுக்கு உள்ளாக்கமாட்டோம் என்று போரிட்ட வரலாறு ஒப்பாரும் மிக்காருமற்ற ஓர் ஆயுதப் போராட்டத் தலைமுறையால் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது.

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல கூட்டாட்சி என்ற சொற்பதம் ஈழத் தமிழர் நாவில் ஏற்றப்பட்ட கொடுமை எவ்வாறு நிகழ்ந்தது?

சிங்கள தேரவாத பௌத்தப் பேரினவாதம் கூட்டாட்சி என்ற சொல்லைப் பிரிவினைக்கு ஈடானதாகப் பார்த்துவருவது இன்று நேற்றல்ல. அதற்கு நீண்ட நெடிய வரலாற்று மரபே உள்ளது!

ஆகவே, அவர்களை நோக்கிக் கூட்டாட்சிக் கதைகளை அளந்துகொண்டிருப்பதற்குப் பதிலாக நேரடியாகவே விடயத்துக்கு வருவது தான் நல்லது.

அதாவது களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதை அவர்களுக்கு விளக்கு வதில் முயற்சியையும் நேரத்தையும் செலவிடுவது கூட்டாட்சி என்ற நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றைப் பற்றிப் பிதற்றுவதை விட மேலானது.

இதை அறியாதவர்கள் அல்ல தேர்தல் தமிழ் அரசியல்வாதிகள்!

இலங்கையின் ஆறாம் சட்டத்திருத்தத்தைப் பார்த்து அதீதமாகப் பயப்படுவோர் 'மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல கூட்டாட்சி என்று கூப்பாடுகள் செய்கின்றனர்.

13 ஆம் சட்டத்திருத்தத்தை சவப்பெட்டியாக எரித்துப் போராட்டம் செய்யத் தயார் நிலையில் இருக்கும் இவர்கள் ஆறாம் சட்டத்திருத்தத்தைக் கண்டு பேயைப் பார்த்தது போல் பயந்து ஒடுங்கிவிடுவர்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் எவ்வாறு கட்சி மாறினாரோ அதைப் போல அவரின் பேரன் ஆறாம் சட்டத்திருத்தப் பேயைக் கண்டு அதீதமாக அஞ்சுவதற்கு அவரது குடும்பத்திடம் தென்னிலங்கையில் இருக்கும் சொத்துக்கள் காரணமாக இருந்தால், சொத்துரிமையில் இருந்து அவர் விடுபட்டு அரசியல் செய்யவேண்டும். அவரது குடும்பச் சொத்துச் சிக்கலை தமிழ் மக்களின் சிக்கலாக மாற்றும் அரசியலுக்குள் இழுத்துச் செல்வது தேசத்துக்கு நல்லதல்ல என்பது அவருக்குத் தெளிவாகப் புரியவைக்கப்படவேண்டும்.



இவர்கள் பேசும் கூட்டாட்சி, சுவிற்சர்லாந்தில் இருந்தும் பெல்ஜியத்தில் இருந்தும் தவறான சிட்டைகளில் ஏற்றுமதி செய்யப்படுபவை.

இலங்கைத் தீவின் அரசியலமைப்புக் கட்டுரைப்பைத் திரிபுபடுத்துவதற்காகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள முகவர்கள் ஊடாக, குறிப்பாக மேற்கத்தைய பல்கலைக்கழக, சிந்தனைக் குழாத்து, இலவசச் சட்ட உதவி, சர்வதேசத் தன்னார்வ, தூதரக சலுகை அரசியலுக்கூடாக ஆற்றுப்படுத்தப்படும் 'கட்டுப்படுத்தல் மூலோபாயத்தின்' உத்திகளே இந்தச் சிட்டைகள்.

இந்தச் சிட்டைகளுக்குப் பின்னால் சாதாரண கண்களுக்குப் புலப்படாமல் சிங்கப்பூர் தீர்மானங்கள் என்றும் இமாலயப் பிரகடனம் என்று எழுதாமல் எழுதப்பட்டிருக்கும்.

இவற்றை இந்தியாவுக்குள்ளும் ஏற்றுமதி செய்ய தமிழ்நாட்டுக்குள் கூட்டாட்சிக் கோரிக்கையைக் கொண்டு செல்லவேண்டும்.

அதற்கான கூலிவேலைக்கு அவ்வப்போது ஏற்ற முகவர்கள் கிடைப்பது ஒன்றும் புதிதல்ல. ஆகவே, முகவர்களையும் முகவர்களுக்குப் பின்னாலுள்ள அனைத்துலக முகவர்களையும் நொந்துகொள்வதிலும் பார்க்க, தவறான சிட்டை கள் எவை என்பதை மக்களுக்கு விளக்கு வதே கூடுதற் பொருத்தமானது.

களையவொண்ணா சுயநிர்ணய உரிமை எந்தெந்தச் சூழல்களுக்குப் பொருத்தமானது என்று சர்வதேச நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பதை நோக்கும் போது, குறிப்பாக

1 **காலனித்துவ ஆதிக்கம்,**

2 **வேற்று ஆக்கிரமிப்பு,**

3 **நிறவாத, பேரினவாத ஆட்சிகளின் கடுந் தாக்கம் (இன அழிப்பு)**

4 **உள்ளார்ந்த சுயநிர்ணயம் திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்ட அரசியலமைப்புவரலாறு**

**என்ற காரணிகள் புலப்படும்.**

2009 ஆம் ஆண்டின் பின்னான 16 ஆண்டுகாலத்தின் பின்னரும் மேற்குறித்த நான்கும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாக ஈழத்தமிழர் சுய நிர்ணய உரிமை மறுப்பில் தொடருவது தெளிவாகத் தெரிகிறது.

ஆனால், 'வெறும்' சுயநிர்ணய உரிமை பேசப்படும் சூழல்களாக:

1 **அரசியலமைப்புச் சீர்திருத்தம்**

2 **கூட்டாட்சி**

3 **ஒப்பீட்டு நியாயத்தன்மை**

4 **சர்வதேச வற்புறுத்தல்**

**போன்ற சூழல்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.**

எமது சூழலைச் சரியாகத் தகவமைத்துக் காட்டி எமக்கான கட்டுரைப்பை முன்வைக்கத் தெரியாதவர்கள் பலன் எதுவுமற்ற சிட்டைகளைத் தெரிந்துகொண்டே பெற்றுக்கொண்டு, அவற்றைத் தமிழ்நாட்டுக்கும் சில புலம்பெயர் அமைப்புகளுக்கும் அழகாகப் பொதிபண்ணி விற்க முனைகிறார்கள்.

இதற்காக, ஊடகங்களை உருவாக்கவும் கருத்துருவாக்கம் பண்ணவும் பல கோடி ரூபா நிதியை சில மேற்கு நாடுகள் ஒதுக்கி, ஒவ்வொன்றாகப் பணமுடிச்சுக்களை அவிழ்த்து வருகின்றன. நல்லிணக்கப் பொதிமூட்டை முடிந்து இப்போது கூட்டாட்சிப் பொதிமூட்டை அவிழ்க்கப்படுகிறது!

இதிலே முதலாமிடத்தைத் தட்டிச் செல்வது சுவிற்சர்லாந்துச் சிட்டை. சுவிற்சர்லாந்து இணைப்பாட்சியாக இருந்து கூட்டாட்சியாக எப்போதோ மாறிவிட்டது. பெயரில் மட்டும் இணைப்பாட்சி என்பது உள்ளது. அங்கிருக்கும் எந்த ஒரு மக்களுக்கும் தனித்துவமான சுயநிர்ணய உரிமை இருப்பதாக அது அங்கீகரிக்கவில்லை. இன்றிருக்கும் கூட் டாட்சியில் கன்ரோன்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை கிடையாது.

இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொள்கிறது பெல்ஜிய புளூரிநாச(னல்)ச் (plurinational) சிட்டை. பெல்ஜியம் ஒற்றையாட்சியாய் இருந்து கூட்டாட்சியாக மாறியது. தாயகக் கோட்பாடு கிடையாது. ஆனால், பன்மைத்துவ மக்களுக்கான அங்கீகாரம் இருக்கிறது. அதனால், பெல்ஜியத்தை ஆராயவேண்டுமாம். அதிலே தான் தீர்வு உள்ளதாம். இதை எழுதவேண்டுமாம். தமிழர்களுக்கு கூட்டாட்சி பற்றி அறிவு போதாது என்பதால் அதைக் கற்பிக்கவேண்டுமாம்.

தாயகக் கோட்பாடு இனிமேற் சாத்தியமில்லை என்று நம்பும் கூலிக்கு மாரடிப்பவர்கள் பணமுள்ளவரை பெல்ஜிய மாடலைப் பற்றி எழுதுவார்கள்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## மறுக்கமுடியாத ... தொடர்ச்சி ...

மூன்றாமிடத்திலுள்ள கனடா கொஞ்சம் வித்தியாசமான சிட்டை. ஒரு வகையில் நியாயமான சிட்டையும் கூட.

இது இணைப்பாட்சியாக இருந்து கூட்டாட்சியாக மாறியது. இதை மறந்து போயிருந்த ஒரு மாநிலம் பிரிய முற்பட்டபோது உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஏகமனதாகப் பிரியும் உரிமை கனடியக் கூட்டாட்சியில் கிடையாது என்றது அந்த 1998 ஆம் ஆண்டுத் தீர்ப்பு.

இதற்கென்ற சிறப்புச் சட்டவாக்கத்தை கனடா உருவாக்கிய பின்னரே அந்தப் பொது வாக்கெடுப்புப் படிமுறை உரிமை உறுதியாக்கப்பட்டது.

அதாவது, கூட்டாட்சி என்பதால் சுயநிர்ணய உரிமை இயல்பாக உறுதிப்படுத்தப்படாது என்பதை விளங்கிக் கொள்ள கனடாச் சிட்டை பயன்படும்.

ஈழத்தமிழ்க் கூட்டாட்சிக் கூப்பாடிகள் முதலில் கனடாவின் இந்த 2000 ஆம் ஆண்டுச் சட்டவாக்கத்தைப் படிக்கவேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் கனடாவில் நடந்தேறிய சட்டவாக்கம் கனடிய சமுதாயத்தின் முதிர்ச்சியின் பெறுபேறு. அந்த முதிர்ச்சியைக் காணும் தன்மை இலங்கைக்கு இல்லை.

ஒரு காலத்தில் ஆதிக்குடிகள் மீது இன அழிப்புப் புரிந்த கிறீத்தவ மரபில் வந்து பிற் காலத்தில் தாராளவாத மக்களாட்சி அரசியலில் ஈடுபடும் கனடா போன்ற நாடல்ல இலங்கை. தேரவாத பௌத்த முன்னுரிமைவாத மரபில் வந்து குரூரமான இன அழிப்பை தற்காலத்தில் மேற்கொண்ட ஓர் ஒற்றையாட்சி அரசு. இதே வரலாறு மியான்மாரில் நடந்தேறி உலக நீதி மன்றத்தில் தற்போது விசாரணைக்கு உட்படுத் தப்படுள்ளது.

ஆகவே, கனடா போன்ற படிமுறைக் கூட்டாட்சிக்கான அடிப்படை இலங்கையில் சாத்தியமாகும் என்ற கற்பனைகளைத் தேவையில்லாமல் வளர்த்துக்கொள்ளக்கூடாது.

பிரித்தானியா எனும் எழுதப்பட்ட அரசியலமைப்பைக் கொண்டிராத ஒற்றையாட்சியோ, கனடாவின் கூட்டாட்சிக்குத் தானும் இணையானது என்றும், ஒற்றையாட்சி, கூட்டாட்சி என்ற சிட்டைகளில் எல்லாம் அர்த்தமில்லை; அதிகாரங்களை வரையறுக்கும் அரசியலமைப்பின் உள்ளடக்கத்தில் தான் அர்த்தமுள்ளது என்றும் சொல்லுகின்ற விநோதமான சிட்டை. இந்த விநோதமும் இலங்கைக்குப் பொருத்தமற்ற ஏட்டுச்சுரைக்காய்.

பெரிய வெள்ளி ஒப்பந்தம் எடின்பரா ஒப்பந்தம் போன்றவற்றை இலங்கையில் சாதிக் கவியலுமா என்ற கேள்வியை பிரித்தானிய அரசியல் தரப்புகளுக்கு எடுத்து விளக்கும் ஆற்றலோடு மட்டுமல்ல இலங்கையின் தவறான அரசியலமைப்புக் கட்டுரைப்பில் பிரித்தானியாவின் பொறுப்பையும் உரிய முறையில் சுட்டிக் காட்டவேண்டும்.

களையவொண்ணா சுயநிர்ணய உரிமை என்பதை விளங்கிக்கொள்வதே இதற்கான திறவுகோல். இந்தியச் சிட்டை வேறுவிதமானது. 'அடுக்குக் கேக்' போல ஓரளவுக்கேனும் அதிகாரங்கள் வரையறுத்துப் பிரிக்கப்பட்டு நடைமுறையில் இன்றிருக்கும் மாநில, மத்திய அதிகாரங்களைக் கூட ஒன்றுக்குள் ஒன்று கலந்து 'மார்பிள் கேக்' போன்ற கூட்டாட்சிக் கலவையாக மாற்றிவிட எத்தனித்து ஒற்றையாட்சி போலச் செயற்பட வைக்கும் போக்கில் இந்தியாவின் கூட்டாட்சியை வட இந்தியா நகர்த்திக்கொண்டிருக்கிறது.

இந்தப் போக்குக்குக் 'கூட்டுறவுக் கூட்டாட்சி' (Cooperative Federalism) என்று 'நாமம்' சூட்டப்பட்டுள்ளது. இது 'இந்தியன் மாடல்' கூட்டாட்சி! இதை எதிர்த்து நிற்பது திராவிட மாடல் மாநில ஆட்சி!

இதற்குள் தமிழ்த் தேசியம் எப்படியிருக்க வேண்டும் என்பதை வகுத்துக்கொள்வது தமிழ் நாட்டினரின் சுயநிர்ணய உரிமையின் பாற்பட்டது.

இப்படியான இடங்களிற் சென்று ஈழத் தமிழர்களுக்குக் கூட்டாட்சி வேண்டும் என்று கதைப்பது விந்தையானது.

மறைந்துபோன சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகியோருடன் செல்வநாயகம் மட்டுமல்ல தம் முயிரை ஈந்த பல்லாயிரக்கணக்கான மாவீரர்களதும் மக்களதும் வரலாற்றை இடறுவதற்கு ஒப்பானது.

பிரபாகரன் சிந்தனைப்பள்ளியில் தேறிய வர்கள் இனியாவது தேர்தல் அரசியற் கட்சிகளிடமிருந்து ஈழத் தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

**நன்றி - தமிழ்நெற்**

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி ...

ரஷ்ய எண்ணெய் இறக்குமதி இந்த மாத இறுதிக்குள் ஒரு நாளைக்கு சராசரியாக 1.5 மில்லியன் பீப்பாய்களாக உயரக்கூடும். இந்தியாவின் ரஷ்ய கச்சா எண்ணெய் கொள்முதல் ஒரு நாளைக்கு 1.2 மில்லியன் பீப்பாய்களைத் தாண்டும் என்று ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

தெற்காசிய நாட்டின் மிகப்பெரிய அரசுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப், தடைகளுக்கு முந்தைய நிலைகளுக்கு ஏற்ப ரஷ்ய அதிகரித்துள்ளது. பாரத் பெட்ரோலியம் அதன் ஜனவரி இறக்குமதியை டிசம்பரில் இரண்டு சரக்குகளிலிருந்து குறைந்தது ஆறு சரக்குகளாக உயர்த்தியுள்ளது.

அக்டோபர் 22 அன்று அமெரிக்கா தடைகளை அறிவித்தது, இது நவம்பர் 21 ஆம் தேதிக்குள் ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களான ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயிலுடனான ஒப்பந்தங்களை நிறுவனங்கள் நிறுத்துவதற்கான காலக்கெடுவை நிர்ணயித்தது. ஐரோப்பிய ஒன்றியம் ஜனவரி 21 ஆம் தேதி காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது, அதன் பிறகு அது ரஷ்ய கச்சா எண்ணெயைக் கையாளும் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளை ஏற்றுக் கொள்ளாது.

இந்தியா உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதியாளர். நவம்பரில் ஒரு நாளைக்கு 1.77 மில்லியன் பீப்பாய்கள் ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்ததுஇ இது அக்டோபரை விட 3.4% அதிகமாகும்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்த மாத தொடக்கத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இந்தியாவிற்கு தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்வதாக உறுதியளித்திருந்தார்.

2022 முதல் ரஷ்யா இந்தியாவின் முன்னணி எண்ணெய் சப்ளையராக உள்ளது, அதன் பிறகு தெற்காசிய நாடு ஐரோப்பாவிற்கு சுத்திகரிக்கப்பட்ட எரிபொருட்களின் முக்கிய ஏற்றுமதியாளராகவும் உருவெடுத்துள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலர்களாக உயர்த்த இந்தியாவும் ரஷ்யாவும் ஒரு கட்டமைப்பை உருவாக்கி வருவதாகவும், எரிசக்தி மற்றும் பாதுகாப்பு தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மலையகத் தமிழ ... தொடர்ச்சி ...

மக்கள் இடம்பெயர்ந்தால், அந்தப்பகுதிகளில் தமிழ் சமூகத்தின் இருப்பு முற்றிலும் குறையும். அதன் விளைவாக, மலையகப் பகுதிகள் முழுமையாகசிங்களமயமாகும் அபாயம் உள்ளது. அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல்போகும்; பாராளுமன்றத்திற்கே ஒருமலையகத் தமிழ் பிரதிநிதியை அனுப்ப முடியாத நிலை உருவாகலாம். ஆகவே, முழுமையான குடியேற்றம் ஒருதீர்வாகாது.

### அப்படியானால் நீடித்த தீர்வு என்ன?

நாம் இரண்டு வழிகளையும் ஒரே நேரத்தில் சிந்திக்க வேண்டும். ஒன்று, வடக்கு–கிழக்கிற்கு வர விரும்பும் மக்களுக்கு – காணி, வாழ்வாதாரம், சமூக பாதுகாப்பு, மரியாதையான வாழ்வுஆகியவை முன்கூட்டியே உறுதி செய்யப்பட வேண்டும்.

இரண்டாவது, மலையகத்திலேயே வாழ விரும்பும் மக்களுக்கு – மண் சரிவு அபாயமற்ற சமதளப் பகுதிகளில்குடியிருப்புகள், காணி உரிமை, போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டும். தேயிலைத் தோட்டத்தொழிலாளர்கள் என்ற அடையாளத்துக்குள் அவர்களை முடக்கக்கூடாது.

### இறுதியாக நீங்கள் வலியுறுத்த விரும்புவது என்ன?

மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய தூண்கள். ஆனால் இன்றும் அவர்கள் அடிமைத்தனவாழ்க்கைக்குள் தள்ளப் பட்டுள்ளனர்.

அவர்களுக்கு உயிர்வாழும் உரிமையுடன் கூடிய பாதுகாப்பான, மரியாதையான வாழ்க்கை உறுதி செய்யப்படவேண்டும். வடக்கு–கிழக்கு அழைப்பு என்பது ஒரு வாய்ப்பாக இருக்கலாம்; ஆனால் அது கட்டாயமாகவோ, அரசியல் இலாபத்துக்காகவோ அல்ல.

மலையக மக்களின் விருப்பமே முடிவின் மையமாக இருக்க வேண்டும்-அதுவே உண்மையான மனிதநேய தீர்வு.

• • •





# மலையக காணி உரிமை


## வரலாற்றுப் போராட்டத்துடன் அண்மைய அரசியல் ஒருங்கிணைப்பு

மருதன் ராம்

இலங்கையின் தேயிலைத் தோட்டங்களின் முதுகெலும்பாகவிளங்கும்மலையகபெருந் தோட்ட மக்கள், சுமார் இரண்டு நூற்றாண்டு களாகியும் தமது சொந்த மண்ணில் நிரந்தரமான காணி உரிமை அற்றவர்களாக வாழ்வது, நாட்டின் இனப்பிரச்சினையில் மிக முக்கியமான மற்றும் நீதி மறுக்கப்பட்ட அத்தியாயங்களில் ஒன்றாகும். மலையக மக்களின் காணி உரிமைப் பிரச்சினை என்பது வடக்கு - கிழக்குத் தமிழ் அரசியல் தலைமைகளுடனான வரலாற்றுப் பிணைப்பையும், முரண்பாடுகளையும் உள்ளடக் கியது. மலையக மக்களின் வாழ்க்கை, தோட்ட நிர்வாகத்தால்அமைக்கப்பட்டலயன்குடியிருப்பு களுக்குள் முடக்கப்பட்டுள்ளது.



இந்தநிலைமையே காணி உரிமைப் போராட்டத்தின் மையமாக உள்ளது. பெரும் பாலானமலையகமக்கள்குடியிருக்கும்நிலங்கள், தோட்ட நிர்வாகத்துக்கோ அல்லது அரசுக்கோ சொந்தமானவையாகவே இருக்கின்றன. 75 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பின்னரும், இவர் களுக்கு சட்டபூர்வமான காணி உறுதியுடன் கூடிய நிரந்தர வீடுகள் கிடைக்கவில்லை.



காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்படி, ஒரு தோட்டத் தொழிலாளியின் குடும்பத்திற்கு 20 பேர்ச் காணியை வீட்டுரிமைக்காக ஒதுக்க முடியும் என விதியிருந்தும், அரசாங்க மற்றும் இந்திய வீடமைப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் காணிகள் வெறும் 7 பேர்ச் அளவிலேயே உள்ளன. அதுவும் முழுமையான சட்ட உரித்து அற்றவைகளாகவே உள்ளன.



மலையகத்தின் சில பகுதிகளில், பாது காப்பான மற்றும் விவசாயத்துக்கு ஏற்ற காணிகள் குறைவாக இருப்பது ஒரு சவாலாக உள்ளது. கடந்த காலங்களில் இப்பிரச்சினையை ஒரு நிரந்தரத் தீர்வுக்கு இட்டுச்செல்லும் வலுவான அரசியல் விருப்பம் மத்திய அரசாங்கங்களிடம் குறைவாகவே இருந்துள்ளது. அதேபோன்று பாதுகாப்பற்ற மலைச்சரிவுகளிலும், மண்சரிவு அபாயம் உள்ள இடங்களிலும் தொடர்ந்து வசிப்பது, மண்சரிவு அனர்த்தங்களின் போது பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்துகிறது. இதுவே, பாதுகாப்பான மாற்று நிலங்களுக் கான கோரிக்கையை வலுப்படுத்தியுள்ளது. உதாரண மாக அண்மையில் இலங்கையை தாக்கிய 'டிட்வா' புயலினால் அதிக உயிர் சேதமும் அதிக உடமைகளுக்கான சேதமும் மலையக பெருந் தோட்ட பகுதிகளிலேயே பதிவாகி உள்ளன. இந்தநிலையில் மலையக மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில், வடக்கு-கிழக்கு அரசி யல் தலைமைகளின் செயற்பாடுகள் இரண்டு பக்கங்களில் பார்க்கப்படுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்தவுடன் மலை யக மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டங் கள் (1948) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட் டன. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, வடக்கு மாகாணத் தமிழர்களைப் பிரதி நிதித்து வப்படுத்திய சில மூத்த தமிழ் அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டத் திற்கு ஆதரவாக வாக்களித்த கசப்பான வரலாறு பதிவாகியுள்ளது.

மலையக மக்களை 'அந்நியர்கள்' எனக் கருதிய அந்த நிலைப்பாடு, தமிழ் அரசியலுக் குள் ஒரு ஆழமான முரண்பாட்டை ஏற்படுத்தி யது. எனினும் பின்னாளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் (TNA) உறுப்பினராக எம்.ஏ.சுமந்திரன்,பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில், மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்தமை ஒரு ஜனநாயக விரோதச் செயல் என்றும், இது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட வர லாற்றுப் பெரும் கறை என்றும் சுட்டிக்காட்டி, நீதிக்காகக் குரல் கொடுத்துள்ளார். அத்துடன் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பல பாராளுமன்ற உறுப்பினர்களும் இதே நிலைப்பாட்டில் உள்ளமை பல சந்தர்ப் பங்களில் வெளிப்பட்டுள்ளன.



இதன் மூலம், வடக்கு-கிழக்குத் தலைமை கள், அந்தக் கசப்பான வரலாற்றுத் தவறைக் கண்டனம் செய்கின்றமை வெளிப்படுகிறது. மலையக அரசியல் தலைவர்களின் தொடர்ச்சி யான போராட்டங்கள் பாராளுமன்றத்தில் எதிரொலித்ததுடன், வடக்கு-கிழக்கு அரசியல் தலைவர்கள் பொதுத் தேசிய இனப் பிரச்சினை யின் ஒரு பகுதியாக மலையக மக்களின் உரிமைகளுக்காக அவ்வப்போது குரல் கொடுத் துள்ளனர்.


இந்தப் பின்னணியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அண்மையில் மலையக மக்கள் குறித்து வெளியிட்ட கருத்து வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. மலையக மக்க ளின் காணிப் பிரச்சினையில் ஒரு புதிய அரசியல் திருப்புமுனையாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனின் அண்மைய கருத்து அமைந்துள்ளது.

மலையக மக்களின் பாதுகாப்பற்ற வாழ்வு தொடர்ந்தால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடியேற்றம் குறித்துச் சிந்திக் கலாம் என அவர் பகிரங்கமாகக் கருத்துத் தெரி வித்தார். இது, அரசாங்கம் காணி உரிமையை மறுத்தால், தமிழ் சமூகத்தின் தாயகக் கருத்துக் குள் மாற்றுத் தீர்வைத் தேடும் ஒரு நகர்வாகப்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# அரசுகள் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள மீனவர்கள் வலியுறுத்த வேண்டும்






மணி

இந்திய தமிழ் மீனவர்கள் எல்லை தாண்டும் சிக்கல், இலங்கையின் தமிழர் வாழ் பிரதேசமான வடக்கில் கனன்று கொண்டிருக்கும் நாளாந்த இடையூறாக உருவெடுத்திருக்கிறது. இந்திய தமிழ் மீனவர்களின் இழுவைப்படகு பயன்பாடு ஒருபுறமிருக்க, இச்சிக்கலின் மற்றொரு மையப்புள்ளியாக ‘கச்சத்தீவு’ இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் தலைமைகள் முதல் சமீபத்தில் கட்சி தொடங்கிய நடிகர் விஜய் வரை ‘கச்சத்தீவு மீட்பை’ பிரதானமாக முன் வைக்கின்றனர்.



அண்மையில், எல்லைத் தாண்டும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத இழுவைப் படகுகளை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள கடற் றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் முன்பாகப் போராட்டத்தினை நடத்தியிருந்தனர். எல்லை தாண்டும் சிக்கலைத் தீர்க்கக்கோரி வடக்கு மீனவ அமைப்புகளின் கோரிக்கை மீது எவ்வித காத்திரமான நடவடிக்கையினையும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என வடக்கு வாழ் மீனவர்கள் எண்ணி வருகின்றனர். இதே போல், இந்திய தமிழ் மீனவர்கள் தரப்பும் இச்சிக்கலில் இந்திய அரசாங்கம் முறையான, தேவையான பேச்சு வார்த்தை வழியிலான முன்னெடுப்பை மேற் கொள்ளவில்லை என்று எண்ணு கின்றனர்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளை உட னடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க விடம் வலியுறுத்தியி ருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன், வடமாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட் டங்களிலுள்ள மீனவர்கள் இந்திய இழுவைப் படகுகளால் கடுமையான பாதிப்புக்களை எதிர் நோக்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.



மேலும், வடபகுதி கடற்பரப்பு முழுவதும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனால் வடபகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை ஏற்படுகின்றது என ரவிகரன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக பேசியிருக் கும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இவ்விவகாரம் பூகோளரீதியான ஒரு பிரச்சினை என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தியாவில் தேர்தல் ஒன்று நெருங்கிவரும்போது இந்தவிவகாரம் ஒரு பாரிய பிரச்சினையாகத் தலைதூக்கும். அதேபோல் நமது நாட்டிலும் ஒரு தேர்தல் ஒன்று நெருங்கிவரும்போது இந்த பிரச்சினை பாரிய பிரச்சினையாக மாறும். இந்தப் பிரச்சினைஇருநாடுகளுக்கிடையிலானபிரச்சினை. இருப்பினும் இந்திய இழுவைப்படகுகள் எமது எல்லைக்குள் நுழைவதை நாமே தடுக்கவேண்டும்.



இவ்வாறு இந்திய இழுவைப்படகுகள் எல்லை தாண்டி வருவதுதொடர்பில் எமது பாதுகாப்புத் தரப்பினர், குறிப்பாக கடற்படையினர் ஏற்கனவே நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக தெரி வித்திருக்கிறார்.




இந்திய தமிழ் மீனவர்களின் பார்வை யில், இச்சிக்கல் வெறும் எல்லைச்சிக்கல் அல்லது கச்சத்தீவு மீட்பாக மட்டுமின்றி மீனவத் தொழிலாளர்களின் வாழ்வைச் சீர்குலைக்கும் பிரச்சினையாக இருக்கிறது. இலங்கை கடற்படை மேற்கொள்ளக்கூடிய படகு பறிமுதல், மீனவர்கள் கைது, மீனவர்கள் மீதான தாக்குதல் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான பிரச்சினைகளை மேலும் விரிவடையச்செய்யக்கூடியதாக இருக்கி றது. இன்னும் உள்ளார்ந்து ஆராய்ந்தால், கடந்த காலங்களில் இந்திய தமிழ் மீனவர்களை இலங்கை கடற்படை சுட்டுக்கொன்ற பெருந்துயர்மிகு நிகழ்வுகள் இச்சிக்கலை ‘இனச்சிக்கலுடன்’ ஒன்றிணைக்கும் விவகாரமாகவும் இருப்பதை மறுக்க இயலாது. இந்திய தமிழ் மீனவர் தரப்பில் பயன்படுத்தப்படும் இழுவைப்படகுகளின் பயன் பாட்டில் லாபம் கொழிக்க எண்ணும் முதலாளி களின் ஆதிக்கம் இதில் உள்ளதா என்று கேள்வியும் எழவேச் செய்கிறது. இந்திய தமிழ் மீனவத் தலைமைகள் தரப்பில், இந்தியா- இலங்கைக்கு

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# "இராவணன் கோட்டம்" நூல் வெளியீட்டு அறிக்கை!

தமிழர் வள ஆலோசனை மையம்
நோர்வே




கடந்த சனிக்கிழமை (13.12.2025) நோர்வேயில் நடைபெற்ற "இராவணன் கோட்டம்" வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நிறைவுற்றது. "திருமலை நவம்" எனப் போற்றப்படும் திருமிகு சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் அவர்களால் ஆக்கப்பட்ட இந்நூல், ஈழத் தமிழர்களின் வழிவழி மரபுரிமை அடையாளமான திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றின் வரலாற்றுத் தொன்மையை ஆவணப்படுத்தும் உயரிய நோக்குடன் வெளியிடப்பட்டுள்ளது.



தமிழரின் தொன்மம், மரபுவழி அடையாளம் மற்றும் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி ஈழத் தமிழர்களின் தாயகம் என்பதற்கான வரலாற்றுத் தொடர்ச்சியை அறிவியல் முறைப்படியான தரவுகளுடன் இந்தப் படைப்பு முன்வைக்கின்றது. மகாபாரதம், இராமாயணம் போன்ற நெடுங்காப்பியங்கள் மட்டுமன்றி, ஐரோப்பிய குடியிருப்பிய ஆட்சியாளர்களின் குறிப்புகளையும் சான்றுகளாகக் கொண்டு, இராவணன் காலத்துத் தமிழர்களின் மெய்யியல் மற்றும் வழிபாட்டு முறைகளை ஆசிரியர் இதில் நிறுவியுள்ளார்.

மேலும், சிங்கள வரலாற்று நூலான மகாவம்சம் முன்வைக்கும் புனைவுகளுக்கு மாற்றாக, கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் சான்றுகளை முன்னிறுத்தி, திட்டமிட்ட அறிவமத(பௌத்த)மாக்கல் மற்றும் நிலப்பறிப்புகளுக்கு எதிராகத் தமிழரின் வரலாற்றுத் தொடர்ச்சியை மறுக்க முடியாத வகையில் இந்நூல் பதிவு செய்கிறது.

## நூலின் நோக்கம்!

2017-இல் வெளிவந்த "இராவண தேசம்" நூலின் தொடர்ச்சியாகவே "இராவணன் கோட்டம்" உருவானதாக நூலாசிரியர் தனது இணைய வழி உரையில் விளக்கினார். தமிழரின் நீண்ட காலத் தொன்மையும் அடையாளமும் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமது முதன்மை நோக்கம் என அவர் குறிப்பிட்டார். கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி 6,000 ஆண்டுகளுக்கும் மேலான தமிழரின் தொல்நிலம் என்பதற்கான இலக்கிய மற்றும் தொல்லியல் சான்றுகளை அவர் இதில் தொகுத்துள்ளார்.

## விழாவின் தொடக்கம் மற்றும் பேச்சாளர்களின் கருத்துகள்!

நிகழ்வு நோர்வே தமிழர் வள ஆலோசனை மையத்தில் மங்கல விளக்கேற்றலுடன் தொடங்கியது. திருமிகு ஸ்ரேவன் புஸ்பராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், புலம்பெயர் தமிழ் மக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



திருமிகு ஸ்ரேவன் புஸ்பராஜா (தலைமையுரை - சுருக்கம்): "இந்நூல் தாயகத்தில் வெளியாக வேண்டிய சூழலில், அங்கு நிலவிய படைத்துறைக் கண்காணிப்பு, காவல்துறையின் கெடுபிடிகள் மற்றும் பௌத்த துறவிகளின் கடும் அழுத்தங்கள் காரணமாக நீண்டகாலமாக முடக்கப்பட்டிருந்தது. நூலாசிரியர் எதிர்கொண்ட இத்தகைய அறைகூவல்களைக் களைந்து, கடந்த ஓராண்டு காலத் தொடர் முயற்சியின் பயனாகவே இன்று நோர்வேயில் இதனை வெளியிடும் வாய்ப்பு உருவாகியுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆவணத்தைப் பாதுகாப்பான சூழலில் உலகத்தமிழர்களிடம் கொண்டு சேர்ப்பதே எமது நோக்கம்" என அவர் தனது உரையில் பதிவு செய்தார்.



திருமலை நவம் (நூலாசிரியர்): வரலாறு அழியாமல் அடுத்த தலைமுறைக்குச் சென்றடைய வேண்டும் என்பதே தமது பெருங்கவலை என்றார். 2010-க்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் தொல்லியல் திணைக்களம் ஊடாக முன்னெடுக்கப்படும் பௌத்தவயமாக்கல் மற்றும் பிள்ளையார் கோவில் தகர்க்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்ட கொடுமைகளை இந்நூல் சான்றுகளுடன் புலப்படுத்துகிறது.

திருமிகு ராஜரத்தினம் வேலுப்பிள்ளை: கன்னியா பகுதியில் நடைபெறும் அத்துமீறல்களை நேரில் கண்ட பட்டறிவுகளைப் பகிர்ந்த அவர், இந்த ஆவணத்தைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்து உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# போர்க்களமாகுமா இலங்கை கடல்?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

இலங்கை கடற்கரையிலிருந்து பல நூறு மைல்கள் தொலைவில் உள்ள இந்தியப் பெருங்கடலில் ஒரு சரக்குக் கப்பலில் அமெரிக்க சிறப்பு நடவடிக்கைக் குழு ஒன்று ஏறி, சீனாவிலிருந்து ஈரானுக்குச் செல்லும் இராணுவம் தொடர்பான பொருட்களை கைப்பற்றியதாக வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.



இந்தச் சம்பவம் கடந்த மாதம் நிகழ்ந்துள்ளது, மேலும் ஈரான் தனது இராணுவ ஆயுதக் கிடங்கை மீண்டும் கட்டியெழுப்புவதைத் தடுக்கும் நோக்கில் கடலில் ஒரு அரிய தடை நடவடிக்கை இது என்று அந்த ஊடகம் வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் கட்டளை மையத்துடன் இணைக்கப்பட்ட துருப்புக்களே இலங்கைக்கு அருகில் உள்ள கடலில் வைத்து கப்பலை கைப்பற்றி சோதனை நடத்தி, சரக்குகளைப் பறிமுதல் செய்து, கப்பலைத் தொடர அனுமதித்ததாகவும், அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் பல மாதங்களாக கப்பலைக் கண்காணித்து வந்ததாகவும் அது கூறியது.



ஆனால் கடந்த மாதம் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய கடலுக்கடியில் உளவுபார்க்கும் கருவிகளை கொண்டே இந்த கப்பலை கண்காணித்ததாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவும், யப்பானும் இரண்டு கருவிகளை வழங்கியிருந்தன. இந்த கருவிகள் கொழும்பு மற்றும் திருமலை துறைமுகங்களில் பொருத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் கப்பல்களினுள் உள்ள பொருட்களை மின்காந்த அலைகள் மூலம் கண்டறிய முடியும், கதிர்வீச்சுக் கொண்ட அணுசக்திப் பொருட்கள், வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்களை கண்டறிய முடியும்.


அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட டிட்வா புயல் அனர்த்தத்தின் போது அமெரிக்காவின் சி-130 கேர்கூல்ஸ் இராணுவ விமானங்களின் இலங்கை வரவுக்கும் இலங்கை கடல்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த கடல் நடவடிக்கைக்கும் ஏதும் தொடர்புகள் இருக்குமா என்ற சந்தேகங்கள் தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜூன் மாதம் அமெரிக்காவும் இஸ்ரேலும் தெஹ்ரானின் அணுசக்தி நிலையங்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியதிலிருந்து, அதன் ஏவுகணை வசதிகளை மறுசீரமைக்க ஈரான் மேற்கொள்ளும் இராணுவ கொள்முதல் முயற்சிகளை சீர்குலைக்கும் பென்டகன் முயற்சியின் ஒரு பகுதியாக இரகசியமான இந்த சோதனை இருந்துள்ளது.



புதன்கிழமை, வெனிசுலா கடற்கரையில் அமெரிக்கா ஒரு தடைசெய்யப்பட்ட எண்ணெய் டேங்கரைக் கைப்பற்றியது, இது அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் கூற்றுப்படி, வெனிசுலாவிலிருந்து ஈரானுக்கு எண்ணெய் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறான சோதனைகளை, சமீப காலங்களில் அமெரிக்கா அரிதாகவே பயன்படுத்தி வந்துள்ளது. தனது எதிரிகளுக்கு எதிராக டிரம்ப் நிர்வாகம் ஆக்ரோஷமான கடல்சார் தந்திரோபாயங்களைப் பயன்படுத்துவதை இந்த நடவடிக்கைகள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து ஈரான் மற்றும் சீனாவிடம் இருந்து கருத்து பெற அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஊடகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. இலங்கையில், இந்த நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சகத்தையும் கடற்படையையும் தொடர்பு கொண்ட போது, இரு தரப்பும் கருத்து தெரிவிக்க மறுத்ததுடன், உண்மைகளைச் சரிபார்க்க தமக்கு கூடுதல் அவகாசம் தருமாறும் கோரியுள்ளனர்



அதேசமயம் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் அலிசன் ஹூக்கரை இலங்கை ஜனாதிபதி கடந்த வாரம் சந்தித்திருந்தார், அவர்கள் இருவரும் ‘பொருளாதார மற்றும் வணிக உறவுகளை ஆழப்படுத்துதல், பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கையின் பொருளாதார மற்றும் கடல்சார் இறையாண்மையை ஆதரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு இருதரப்பு பிரச்சினைகள்’ குறித்து விவாதித்திருந்தனர்.



இலங்கை ஒரு சிக்கலான மீட்சியை எதிர்கொள்கிறது, ஆனால் அமெரிக்கா போன்ற நண்பர்களின் உதவியுடன், நமது உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புவோம்” என்று அனுரா தனது அதிகாரப்பூர்வ X பக்கத்தில் தெரிவித்துள்ளார். தேவைப்படும் நேரத்தில் இலங்கையுடன் நின்றதற்காக அமெரிக்கா மற்றும் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கு ஜனாதிபதி தனது ஆழ்ந்த நன்றியைத்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## தமிழர்களின் ... தொடர்ச்சி ...

வேண்டும். இல்லாது போனால் நாங்கள் இன்னும் சில காலங்களில் காணாமல் போய்விடுவோம். எங்களால் எடுக்கப்படும் முன்னெடுப்புக்களுக்கு நாங்கள் துணை நிற்கலாம். சரியான உண்மையான விடயங்களுக்கு துணை நிற்போம். எனவே தான் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பும்,கடமையும் அரசியல் தலைமைகளுக்கு இருக்கிறது.இதனை அவர்கள் செய்ய வேண்டும் “ என்றார்.

மேலும் இந்த விவகாரத்தில் பல போராட்டங்கள் நீதிமன்ற தடைகள் வழக்குகள் என இழுபட்டுக் கொண்டு செல்கிறது. அவ்வப் போது விசேட பூஜை வழிபாடுகள் பிதிர் கடன் நிகழ்வுகளை செய்ய முடியாத அளவுக்கு இந்த சிவ பூமி அபகரிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தின் பின்னரான காலங்களில் பாரம்பரிய தமிழர்களின் பூமிகள் வடகிழக்கில் இவ்வாறு கபளீகரம் செய்யப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கம் ,மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் தற்போதை அநுர அரசாங்கம் வரை தமிழ் மண் மீதான அபகரிப்புக்கு எதிராக எடுக் கப்படும் நடவடிக்கையில் நிரந்தர தீர்வின்றிய நிலை காணப்படுகிறது.

மதச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டு அனை வரும் நிம்மதியாக தலை நிமிர்ந்து வாழ வேண்டிய சூழலை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

இது பற்றி கன்னியா பிரதேசவாசியும் திருகோணமலை உப்புவெளி பிரதேச சபை உறுப்பினருமான பிலிப்ஜோன் விஷோபா தெரிவிக்கையில் “சிவ பூமீ, இராவணதேசம் என வரலாற்று சிறப்புப் பெயர் கொண்டதும் கிழக்கிலங்கையின் தலைநகராகவும் விளங்கும் திருகோணமலை இயற்கை வளத்துடன் சேர்ந்து அரசியல், புவியியல் முக்கியத்துவம் கொண்ட கேந்திர நிலையமாகும்.

திருகோணமலை வரலாற்று சிறப்புமிக்கது மட்டுமல்லாது தமிழர்களின் பாரம்பரியத்தின் கோட்டை என்றே சொல்லலாம்.

இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட திருகோணமலை அதிகளவான சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது. அந்தவகையில் கன்னியா வெந்நீரூற்று அதன் தனிச் சிறப்பால் அதிகளவிலான சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது.

இலங்கையில் 10 இற்கும் மேற்பட்ட இடங்களில் வெந்நீரூற்றுகள் இருக்கின்றன. ஆனால் கன்னியாவில் அமைந்துள்ள வெந்நீரூற் றானது இயற்கையானது மட்டுமல்லாது தமிழர்க ளின் தொன்மைக்கு சான்று பகரும் வரலாற்று சின்னமாகும்.தற்போது இது திட்டமிடப் பட்டு அழிக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக உப்புவெளி பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்த கன்னியா வெந்நீரூற்றானது, யுத்தம் முடிவுற்ற பின்னர் 2010 ம் ஆண்டு திட்டமிடப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டது என்று கூறுவதே பொருத்தமானதாக இருக்கும்.

தமிழர்களின் வழிப்பாட்டு ஸ்தலமான பழமையான சிவனாலயம் பூட்டப்பட்டதுடன் பிள்ளையார் ஆலயம் அகற்றப்பட்டு புத்தர் சிலை நிறுவப்பட்டது.

அத்தோடு அநுராதபுரத்து காலத்தை சேர்ந்த பௌத்த இடிபாடுகளை கொண்ட இடமாக தொல்பொருள் திணைக்களத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

சிவபக்தனான தமிழ் மன்னன் இராவ ணனுடன் தொடர்புடைய இந்துக்களின் வரலாற்று ஸ்தலத்திற்கு பௌத்த சாயம் பூசப்பட்டுள்ளது.

இராவணன் தனது தாயாருக்கு இறுதிச் சடங்குகளை செய்த இடமாக கன்னியா வெந்நீரூற்று தொடர்பான வரலாற்றில் குறிப் பிடப்பட்டுள்ளது. அதனை பின்பற்றி காலம் காலமாக இந்துக்கள் தங்களது இறுதி கிரிகைகளை கன்னியா வெந்நீரூற்றில் மேற்கொண்டு வந்தனர். அதற்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

ஈமக்கிரிகைகள் செய்வதற்கு சென்ற சைவசமய மதகுரு தாக்கப்பட்டதுடன் மக்களும் விரட்டியடிக்கப்பட்டனர்.

இவ்வாறு தமிழர்களின் பாரம்பரியம், வரலாறு, தொன்மை என அனைத்தும் பேரின வாதிகளால் திட்டமிட்டு சூறையாடப் பட்டுள்ளது. இவ்வாறு தமிழர்களிடமிருந்து அடாத்தாக அப கரிக்கப்பட்ட கன்னியா வெந்நீரூற்று இன்று கேட் பாரற்று கிடக்கிறது.

சுற்றுலா பயணிகளின் மூலம் வரும் வருமானத்தை பெற்றுக்கொள்ளும் தொல்பொருள் திணைக்களம் வெந்நீரூற்றினை முறையாக பராமரிக்கவில்லை. கிணறுகள் மற்றும் கிணற்றை சுற்றிய தரைப்பகுதிகள் பாசிகள் படிந்து காணப்படுவதுடன் மலசலக்கூடம் மற்றும் பெண் களுக்கான உடைமாற்றும் அறைகள் என்பனவும் இல்லை என சுற்றுலா பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கன்னியா வெந்நீரூற்றினை மீட்டு உப்புவெளி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என பிரதேச சபையினால் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் இன்னும் இதற்கான தீர்வு வழங்கப்படவில்லை.

கிளீன் ஸ்ரீலங்கா, வளமான நாடு அழகான வாழ்க்கை என திட்டங்களை செயற்படுத்தும் தற்போதைய அரசாங்கம் கன்னியா வெந்நீரூற் றினை மீண்டும் உப்புவெளி பிரதேச சபையிடம் கையளிக்குமா?

தமிழர்களின் பாரம்பரியம் மீட்கப்படுமா? எனவும் இலக்கு மின்னிதழுக்கு அளித்த செவ் வியில் அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் இப்படி யாக தமிழர்களின் வரலாறுகளை கூறும் பல நிலங்கள்,தனியார் காணிகள் ,மதத்தலங்கள் என அரச படையினர்,அரச திணைக்களம், பௌத்த பேரினவாதிகளின் அட்டகாசத்துடன் அபகரிக்கப் பட்டுள்ளது.

தமிழ் பேசும் அரசியல் தலைமைகள் இது விடயத்தில் ஒன்றுபட்டு மக்கள் நலனுக்காகவும் மதச் சுதந்திரங்களுக்காகவும் தமிழ் பாரம்பரிய வரலாற்றை பாதுகாக்கவும் ஒற்றுமையுடன் முன்வர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

• • •

## பெரும் மனிதப் . .. தொடர்ச்சி ...

குழந்தைகள் உட்பட 33.7 மில் லியன் மக்களுக்கு இப்போது மனிதாபிமான உதவி தேவைப்படு கிறது, இது நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 67% ஆகும் என்று அறிக்கை கூறுகிறது.

நாடு கடுமையான உணவுப் பற்றாக் குறையைஎதிர்கொள்கிறது,19.2மில்லியன்மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை அனுபவித்து வருகின்றனர், மேலும் 207,000 பேர் பேரழிவு தரும் பசியில் வாழ்கின்றனர். டிசம்பர் 2024 முதல், சூடான் 100,000 க்கும் மேற்பட்ட மக்களுக்கு காலரா தொற்று ஏற்பட்டுள்ளது.

சூடான்இரண்டுஆண்டுகளுக்கும்மேலாக ஒரு கடுமையான மோதலில் மூழ்கியுள்ளது. இந்த மோதல்களின் பின்னனியில் வெளிநாடுகளின் தலையீடுகள் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றன. “உதவிப் பணியாளர்களுக்கு எதிரான தாக்குதல் களில் சூடான் இப்போது மூன்றாவது இடத் தில் உள்ளது, இது 2025 ஆம் ஆண்டில் உலகள வில் உதவிப் பணியாளர்களுக்கு எதிரான தாக்குதல் களில் 12% ஆகும்” என்று அறிக்கை கூறியுள்ளது.

சூடானின் தெற்கு கோர்டோஃபான் மாநிலத்தில் உள்ள ஐ.நா. தளவாடத் தளத்தின் மீது ட்ரோன் தாக்குதலில் ஆறு அமைதிப் படையினர் கொல்லப்பட்டனர். “ஐ.நா. அமைதிப் படை யினரை குறிவைக்கும் தாக்குதல்கள் சர்வ தேச சட்டத்தின் கீழ் போர்க்குற்றங்களாக இருக் கலாம்” என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன் டோனியோ குட்டெரெஸ் எச்சரித்துள்ளது.

பொதுமக்கள் உள்கட்டமைப்பு மீது பரவலான தாக்குதல்கள் நடந்துள்ளன. “சுகா தாரப் பராமரிப்பு மீதான 65 தாக்குதல் களை உலக சுகாதார அமைப்பு ஆவணப்படுத்தியு ள்ளது, அதில் 1,600 க்கும் மேற்பட்டோர் கொல் லப்பட்டனர் மற்றும் 276 பேர் காய மடைந்தனர்.

பொருளாதார சரிவு துன்பத்தை அதிகப் படுத்தியுள்ளது. சூடானின் மனிதவளம் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் முதாசிம் அகமது சேலின் கூற்றுப்படிஇ மோதலுக்கு முன்பு இருந்த சுமார் 21% இலிருந்து தேசிய வறுமை விகிதம் 71% ஆக உயர்ந்துள்ளது, இதனால் 23 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர்.

2023 ஆம் ஆண்டு சண்டை வெடித்ததிலிரு ந்து, 12 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நாட்டிற்குள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், மில் லியன் கணக்கானவர்கள் எல்லைகளைத் தாண்டி அண்டை நாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர். இறப்பு எண்ணிக்கை 40,000 க்கும் அதிகம் என ஐ.நா தெரிவித்துள்ளதுதுள்ளது.

## மலையகத்தின்... தொடர்ச்சி ...

தற்போது கட்சியின் அங் கத் தவர்களுடன் கலந்துரையாடல் கள் இடம்பெற்று வருகின்றது. வெகு விரைவில் இது தொடர் பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு கள் வெளியிடப்படும்’ என்று குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice
cabe
FPWS

## போர்க்களமா... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளார்.

“விரைவான C-130 விமானங்களின் வரவுக்கும், உடனடி 2 மில்லியன் டொலர்கள் அவசர உதவியும் நமது நீடித்த கூட்டாண்மையின் வலிமையை பிரதிபலிக்கின்றன, இரு நாடுகளுக்கும் இடையிலான ஜனநாயக மதிப்புகள் மற்றும் நமது மக்களிடையே நெருக்கமான உறவுகளில் உறுதியாக வேரூன்றியுள்ளன” என்று அனுரா மேலும் தெரிவித்துள்ளார்.

சூறாவளி மீட்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா தனது விமானப் போக்குவரத்து திறனை வழங்குவதற்காக அமெரிக்கா தனது இரண்டு C-130து சூப்பர் ஹெர்குலஸ் விமானங்களையும், அமெரிக்க விமானப்படை 36வது தற்செயல் மீட்புக் குழுவிலிருந்து பணியாளர்களையும் பசுபிக் பிராந்தியத்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பியிருந்தது. வந்த அமெரிக்க துருப்புக்கள் குவாம் மற்றும் பிற பிரிவுகளிலிருந்தும், அமெரிக்கவிமானப்படையின் 374வது விமானப் போக்கு வரத்துப் பிரிவு (யோகோட்டா விமானத் தளம், ஜப்பான்) மற்றும் அமெரிக்க மரைன் கார்ப்ஸின் III மரைன் பயணப் படை (ஒகினாவா ஜப்பான்) ஆகிய வற்றிலிருந்தும் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கையில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விமானப் படை வீரர்களுக்கு நன்றி தெரிவிக்க அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படை தளத்திற்கும் விஜயம் செய்திருந்தார். போர்த் துறையின் மாநில கூட்டுத் திட்டத்தின் (SPP) கீழ் மொன்டானா தேசிய காவல்படை, அமெரிக்க கடலோர காவல்படை மாவட்டம் 13 மற்றும் இலங்கை ஆயுதப்படைகளுக்கு இடையேயான பாதுகாப்பு கூட்டாண்மையை முறைப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் இலங்கையும் கையெழுத்திட்ட ஒரு மாதத்திற்குள் அமெரிக்க உதவி வந்துள்ளது.

இராணுவ மற்றும் சிவில் பேரிடர் தயார்நிலை மற்றும் பதில் மற்றும் பேரிடர் தயார் நிலை, பதில் மற்றும் மீட்புக்கான இராணுவ-பொதுமக்கள் ஒருங்கிணைப்பு ஆகியவை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும். கடந்த மாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் துணைப் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருணா ஜெயசேகர அமெரிக்க-இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முழு சரத்தையும் தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அவர் அதனை முன்வைக்கவில்லை. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் முதல் கூட்டு நடவடிக்கைகள் 2026 கோடையில் திட்டமிடப்பட்டிருந்தாலும் அது செய்யப்படவில்லை. இந்த நடவடிக்கைகள் பேரிடர் மீட்பு, கடல்சார் கள விழிப்புணர்வு மற்றும் தொழில்முறை இராணுவக் கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அமெரிக்க நேரிடையாகவே களமிறங்கியுள்ளது.

அமெரிக்க விமானப் படையினர் இலங்கை வரவு, அதன் பின்னர் இலங்கை கடல்பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்ட ஈரானின் கப்பல் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் அலிசன் ஹூக்கரின்வரவு என்பனஇலங்கைஅரசு எதையோ மறைப்பதை காட்டுகின்றது.

இதற்கிடையில், கடந்த வாரம் ஓமன் வளைகுடாவில் ஈரான் ஒரு எண்ணெய் டேங்கரைக் கைப்பற்றியதாகவும், இந்தியா, இலங்கை மற்றும் வங்கதேசத்தைச் சேர்ந்த 18 பணியாளர்கள் அதில் இருந்ததாகவும் ஏஜென்சி அறிக்கைகள் தெரிவித்தன.

“ஆறு மில்லியன் லிட்டர் கடத்தல் டீசல் எரிபொருளை ஏற்றிச் சென்ற எண்ணெய் டேங்கர் ஓமன் கடலின் கடற்கரையில் தரையிறக்கப்பட்டுள்ளது” என்று ஈரானை தளமாகக் கொண்ட ஃபார்ஸ் செய்தி நிறுவனம் கூறியது.

“கப்பலின் அனைத்து வழிசெலுத்தல் அமைப்புகளையும் தாங்கள் முடக்கியுள்ளதாகவும், வளைகுடாவில் சட்டவிரோதமாக எரிபொருளைக் கொண்டு செல்வதாகக் கூறும் கப்பல்களை இடைமறித்து தாம் கைப்பற்றி வருவதாகவும் ஈரான் படைகள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

கடந்த மாதம் “இரகசியமாக சரக்குகளை எடுத்துச் சென்றதற்காக” ஈரான் ஒரு எண்ணெய் டேங்கரைக் கைப்பற்றியது, இது மற்றொரு நாட்டிற்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கை என்ற மேற்குலகத்தின் கருத்துக்களையும் அது நிராகரித்திருந்தது. எனினும் இலங்கை கடல் பகுதியில் அமெரிக்க ஈரானின் கப்பலை கைப்பற்றியதற்கு பதிலாகவே ஈரான் இந்த கப்பலை கைப்பற்றியதாக என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன.

• • •

## பாரதத்துக்குள் . .. தொடர்ச்சி ...

நாட்டு முதல்வருக்கு எந்த கோரிக்கையும் முன்வைக்கவில்லை அவர்களுடைய கோரிக்கை “ஏக்கியராச்சிய” என்ற சிங்களச் சொல் இல்லாமல் “சமஷ்டி” என்ற சொல் புதிய அரசியல் யாப்பில் இடம்பெற வேண்டும் அதுவே வடகிழக்கு மக்களுக்கான அதிகாரப்பகிர்வுக்கு சாத்தியமாகும். இதுவே அவர்களுடைய முதன்மை கோரிக்கை.

இந்திய தூதுவரை எதிர்வரும் 23/12/2025ல், சந்திக்கும் தமிழ்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதான கோரிக்கை “ஏக்கியராச்சிய” சமஷ்டி பற்றியது இல்லை அவர்களின் கோரிக்கை உடனே மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும் அதற்கான அழுத்தத்தை இலங்கைக்கு இந்தியா வழங்கவேண்டும்.

இந்த இரண்டு குழுக்களும் இரண்டுவிதமான கோரிக்கைகளை ஒரே நாட்டை நோக்கி பாரதநாட்டை நோக்கி முன்வைக்கின்றனர்.

இரண்டு குழுக்களும் ஒரே குழுவாக சேர்ந்து ஒரு குரலில் இந்தியாவுக்கோ, சர்வதேசத்துக்கோ, தமிழ் நாட்டுக்கோ ஈழத் தமிழர்களுடைய அபிலாஷைகள் இதுதான் இதில் முதலில் இதனை செய்யுங்கள், அடுத்து இதனை செய்யுங்கள் என்று ஒற்றுமையாக கூறுவதற்கு எந்த ஒரு தமிழ்த்தேசிய கட்சிகளும் தயாராக இல்லாதபோது இலங்கை அரசோ, இந்திய அரசோ இவர்களுடைய கோரிக்கை எதனையும் செவிசாய்த்தாலும் அதனை பெற்றுத்தர முயற்சிக்கமாட்டார்கள்.

அவர்கள் கூறும் விடை அனைத்து தமிழ்தேசிய கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டில் ஒருதீர்வை கூறுங்கள் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தீர்வும், ஆளுக்கொரு தீர்வும், ஒருவரை மற்றவர் குறைகூறி விமர்சனம் செய்யும் அரசியலே 2009, மே,18, முள்ளிவாய்க்கால் போர் மௌனத்திற்கு பின்னர் 16, வருடங்களாக தொடரும் அரசியல் செயல்பாடாகும .

மக்களை அணிதிரட்டி பலமான மக்கள் இயக்கமாக திரட்டுவதற்காக முயற்சியில் எந்த ஒரு தமிழ்த்தேசிய கட்சிகளும் கடந்த 16, வருடங்களாக அக்கறை காட்டவில்லை மாறாக தேர்தல் அரசியலில் கதிரை பிடிக்கும் பதவி போட்டி அரசியலும், தனிநபர்களை முதன்மைபடுத்தும் கட்சி அரசியலுமே தொடர்வதுதான் தமிழ்மக்களுக்கான சாபக்கேடு.

இந்திய பிரதமருக்கு ஈழத்தமிழர்களுடைய அரசியல் தீர்வு விடயம் தெரியாமல் இல்லை விடுதலைப்புலிகளின் ஆயுதப்போர் பலம் உள்ள காலம் தொட்டு போர் மௌனித்த கடந்த 16, ஆண்டுகளாக பலதடவை இப்போது இரண்டு அணிகளாக பிரிந்து தமிழ்நாட்டிலும்,

இந்திய தூதுவருடனும் உரையாடப்படும் விடங்கள் கூறப்பட்டும் இதுவரை பாரதநாடும் ஈழத்தமிழர்களின் விடயத்தில் அக்கறை காட்டவில்லை செவிடன் காதில் ஊதிய சங்காகவே காலம் கடந்ததே வரலாறு.

மக்களை ஒன்றாக திரட்டி பலமான சக்தியாக மாற்றாதவரை இதுவும் கடந்து போகும்.

## நிறைவேற்று ... தொடர்ச்சி ...

புதிய அரசியலமைப்பை வரை வதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

இதற்காக இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப் பட்ட குழுக்களின் அறிக்கைகள் மற்றும் ஏனைய முன் மொழிவுகள் தற்போது விரிவாக ஆராயப்பட்டு வருகின்றன என்று பிரதமர் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பான வரைவு பற்றிய ‘கருத்துரு ஆவணம்’ விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும், முறையான அரசியலமைப்பு மாற்றத்தின் ஊடாகவே இது சாத்தியமாகும் என்றும் பிரதமர் விளக்கமளித்துள்ளார்.

## இந்தியாவிலி... தொடர்ச்சி ...

படுத்தியுள்ளது.

நிலைமையின் தீவிரத் தைக் கருதி, தரமற்றதாகக் கண்டறியப் பட்ட சில மருந்துகள் தற்போது சந்தையிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

## இராவணன் ... தொடர்ச்சி ...

செல்ல வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினார்.

வல்வை அனந்தராஜ் (எழுத்தாளர்): இராவணன் தீயவன் எனும் வட மொழிப் புனைவை மறுத்து, அவன் ஓர் இசை மதிஞன் மற்றும் சிவனன்பன் என்பதை விளக்கினார். பாவேந்தர் மற்றும் பாவாணர் வழியில் நின்று இனத்தின் மெய்யியலைக் காக்க அறைகூவல் விடுத்தார்.

திருமிகு மீரா சொக்கலிங்கம்: ஈன்றவளுக்கும், ஊட்டிய தமிழுக்கும் தலைவணங்கி உரையைத் தொடங்கிய இவர், மெய்யியலை இழப்பதே இன அழிவிற்கு முதற்படி என எச்சரித்தார். இளையோர்களுக்குப் புரியும் புதுமை வடிவங்களில் வரலாற்றைக் கொண்டு செல்ல வேண்டிய கடமையை வலியுறுத்தி னார்.

திருமிகு ஜெயா (தமிழ்நெற் ஊடகவியலாளர்): தமிழகத்தின் கீழடி ஆய்வு கள் உலகளாவிய அளவில் அறிவியல் முறைப்படி பதிவானது போல, இந்நூலின் தரவுகளும் ஆங்கிலத்தில் ஆவணப்படுத்தப்பட்டு ஒன்றிய நாடுகள் அவை உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றார்.

உதயன் சத்தியநாதன் (இறுதி மதிப்பீட்டு உரை): தமிழரின் தற்காப்பு மற்றும் மொழியின் எதிர்காலம் குறித்து உரையாற்றினார். நமது மெய்யியலையும் மொழியையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கத் தவறினால் இனம் அழியும் பேரிடர் உள்ளதாக எச்சரித்தார். புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இளைய தலைமுறைக்கு நமது வரலாற்றைப் புரியவைக்க வேண்டும் என அவரும் கேட்டுக்கொண்டார்.

### நிறைவுரை!

நிகழ்வின் இறுதியில் ஆர்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டு நூலைப் பெற்றுக்கொண்டனர். ஆழமான ஆராய்ச்சியும், வரலாற்றுத் தரவுகளின் தொகுப்பும் கொண்ட இந்நூல், தமிழ் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

**தொகுப்பு: கதிர், நோர்வே தமிழ் முற்றம்**

**மீண்டும் புதுப்பி . . . தொடர்ச்சி . . .**

பலவீனமாகும்.

இந்நிலையில் தமிழகத்துக்குச் விஜயம் செய்துள்ள கஜேந்திரகுமார் தலைமையிலான அணி யினர், இலங்கையின் ஆட்சியில் உள்ள அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் விரைவில் 'ஏக்கிய இராச்சிய' (ஒற்றையாட்சி) அரசியலமைப்பு வரைவை முன்வைத்து, அதையே இனப்பிரச்சினைக்கான தீர்வாக சர்வதேசத்திற்கு காட்ட முயலப்போகின்றது என்பதை அம்பலப்படுத்தியுள்ளனர்.

கூடவே, ஏற்கனவே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை விடவும் பலவீனமான ஒரு தீர்வை அரசு திணிக்க முயல்வதைத் தடுத்து நிறுத்தும் வகையில் ஒற்றையாட்சியை முற்றாக நிராகரித்து, தமிழர் தேசம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட 'சமஷ்டி' முறையிலான தீர்வுக்கு இந்தியாவின் ஆதரவைத் திரட்டுவதற்கான அழுத்தத்தை தமிழகம் வழங்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனின் ஒருங்கிணைப்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச்சந்தித்த கஜேந்திரகுமார் தரப்பு, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களையும் நேரில் பார்த்து,; ஒட்டுமொத்த தமிழக அரசியல் களத்தையும் தாயகப்பிரச்சினை நோக்கி மீண்டும் ஈர்ப்பதற்கு பிரயத்தனம் செய்துள்ளனர்.

அத்தோடு, தமிழகத்தில் எரிபற்றுநிலையில் உள்ள கடற்றொழிலாளர்கள் விவகாரத்துக்கும் நியாயமான தீர்வு வேண்டுமென தமிழகத் தலைவர்களை நேரடியாகவும் எழுத்துமூலமாகவும் கோரியுள்ளமையும், தமிழர்களை மோதவிட்ட இலங்கை, இந்திய மத்திய அரசுகள் வேடிக்கை பார்க்கின்றன என்பதை சுட்டிக்காட்டியிருப்பதும் அவசரமான அவசியமான விடயமாகிறது.

கஜேந்திரகுமார் குழுவினரின் இந்த நகர்வுக்கு ஏனைய இலங்கைத் தமிழரசுக்க ட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உள்ளிட்டவை சேறடிப்புச் செயற்பாடுகளை கனகச்சிதமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் சந்திப்புக்களினால் அடுத்து தீவிரமான விளைவுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தில் இலங்கை அரசாங்கம் 'ஏட்டிக்குப் போட்டியாக' நகர்வுகளைச் செய்துள்ளது.

கஜேந்திரகுமார் தலைமையிலான குழுவினர் தமிழகத்தில் அரசியல் உரிமைகள் மற்றும் சமஷ்டி பற்றி உரையாடல்களை ஆரம்பித்து மீளவும் உறவுகளைப் புதுப்பித்து தமிழ்த் தேசிய ஆதரவு தளத்தை வலுப்படுத்துவதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கும் வேளையில், இலங்கை அரசாங்கம் தனது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பை அவசரமாகத் தமிழகத்திற்கு அனுப்பி முதலமைச்சரைச் சந்திக்க வைத்துள்ளது. இந்தச்சந்திப்பில்ஐயப்பன்யாத்திரைக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய தேசிய அங்கீகாரம் பற்றி எடுத்துரைக்கப்பட்டிருப்பது தான் வேடிக்கை. முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. மதங்களை முன்னிலைப்படுத்துகின்ற கட்சியொன்றல்ல. அவ்வாறிருக்கையில் இலங்கை அரசாங்கம் மத விடயத்தினை மையப்படுத்தி முதல்வரை அணுக்கிருப்பது தான் அந்த வேடிக்கைக்கு காரணமாகிறது.

உண்மையிலேயே கஜேந்திரகுமார் அணியின் அரசியல் வீச்சை மழுங்கடிப்பதற்கும், இலங்கை அரசு தமிழகத்துடன் இணக்கமான, இறுக்கமான உறவிலேயே இருக்கிறது என்ற பிம்பத்தை உருவாக்குவதற்கும் மேற்கொள்ளப்பட்டவொரு அநுர அரசாங்கத்தின் தந்திரோபாய நகர்வாகும். குறிப்பாக, தமிழ் தேசியத் தலைமைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கான அடிப்படையாகவுள்ள நிரந்தரமான, நியாயமான அரசியல் தீர்வு பற்றிப் பேசும்போது, அநுரவின் அரசாங்கப்பிரதிநிதிகள் பொருளாதார உதவிகள், புயல் நிவாரணங்கள் மற்றும் கலாசார உறவுகளைப் பேசி தமிழகத்தின் கவனத்தைத் திசைதிருப்ப முயல்கின்றமை தெளிவாக வெளிப்படுகிறது.

தமிழக அரசியல் கட்சிகள் தத்தமது மாநில அரசியல் நலன்களுக்காக முடிவுகளை எடுத்தாலும், தாயகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அவற்றின் ஒட்டுமொத்த பின்கள கூட்டாதரவு என்பது சிதைக்கப்பட முடியாதவொரு கேடயமாகும்.

தற்போதைய தாயகத்தின் அரசியல் தேக்க நிலைச்சூழலில் விமர்சனங்களுக்கு அப்பால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரின் இந்தப் பயணம் வெறும் சந்திப்புகளுடன் நின்றுவிடாமல், தமிழகத்துக்கும், தாயகத்துக்கும் இடையிலான பாரம்பரிய இருதரப்பு உறவை பலமான அரசியல் சக்தியாக மீளக்கட்டியெழுப்ப வேண்டும்.

கடந்தகாலத் தலைவர்கள் விட்டுச்சென்ற தொடர்பாடல் இடைவெளியை பூர்த்தி செய்வதும் தமிழகத்தின் ஆதரவை வலுவான அரசி யல் அழுத்தமாக மாற்றுவதும் தற்காலத்தின் கட்டாயமாகும். இந்த விடயத்தில் தாயகத் தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இத்தகைய உறவுகளைப் புதுப்பிப்பதன் மூலம் கொழும்பின் ஒற்றையாட்சி முனைப்புகளையும், அரசாங்கத்தின் ஏட்டிக்குப் போட்டி நகர்வுகளையும் முறியடிக்க முடியும்.

ஆனால் துரதிஷ்டவசமாக அவ்வாறான ஒன்றிணைவு நிகழப்போவதில்லை. கஜேந்திரகுமார் அணி தமிழகத்தினை மையப்படுத்திய நகர்வை முன்னெடுத்திருக்க அதற்கு போட்டியாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவைச் சந்திக்கும் ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் நரேந்திரமோடிக்கு கூட்டுக் கடிதமொன்றை வழங்குவதற்கு தயாராகி வருகின்றனர்.

இந்தச் செயற்பாடு, நீங்கள் தமிழகத்துக்கு போய் தான் டில்லியை வழிக்கு கொண்டு வர முயற்சிக்கின்றீர்கள், நாங்கள் நேரடியாக டில்லியையே கையாளப்போகின்றோம் என்ற 'அரசியல் போட்டியின்' வெளிப்பாடும் கூடவே இந்திய மையவாத நலன்களையும் நிலை நிறுத்துவதாகவே உள்ளது.

• • •

**தாய்வானுக்கு . . . தொடர்ச்சி . . .**

கடைப்பிடிக்குமாறு அமெரிக்காவை சீனா வலியுறுத்துகிறது. மேலும் தாய்வானுக்கு ஆயுதம் வழங்கும் ஆபத்தான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸின் ஒப்புதலுக்காக காத்திருக்கும் இந்தத் ஆயுதங்கள், ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பதவி ஏற்றதற்கு பின்னர் இடம்பெற்ற இரண்டாவது ஆயுத விற்பனையாகும். முதலில் 330 மில்லியன் டொலர்கள் ஆயுதங்களை வழங்கியிருந்தது.

இந்த ஒப்பந்தம் எட்டு தனித்தனி கொள்முதல்களை உள்ளடக்கியது, இதில் 82 HIMARS ராக்கெட் அமைப்புகள் மற்றும் 4 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்புள்ள 420 ATACMS ஏவுகணைகள், டாங்கி எதிர்ப்பு மற்றும் கவச எதிர்ப்பு ஏவுகணைகள், வெடிமருந்துகள், ஆட்டிலறி பீரங்கிகள், இராணுவ மென்பொருள் மற்றும் உதிரி பாகங்கள் ஆகியவை அடங்கும்.

வாஷிங்டனின் வற்புறுத்தலின் பேரில், தைவான் சமீபத்திய ஆண்டுகளில் ஆயுத கொள்முதலை அதிகரித்துள்ளது. அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக ஒரு-சீனா கொள்கையை கடைபிடிக்கும் அதே வேளையில், அது தீவுக்கு ஆயுதங்களை வழங்குவதையும் தைபேயில் உள்ள அரசாங்கத்துடன் இராணுவ உறவுகளைப் பேணுவதையும் தொடர்கிறது.

சீனாவின் உள்நாட்டுப் போரில் தோல்வியடைந்த பின்னர் தேசியவாதப் படைகள் பின்வாங்கி 1949 முதல் தைவானை தமது தளமாக கொண்டுள்ளது. பல நாடுகள் தீவை முறையாக அங்கீகரித்தாலும், ரஷ்யா உட்பட பெரும்பாலான சர்வதேச சமூகம் பெய்ஜிங்கின் ஒரு-சீனா கொள்கையை பின்பற்றுகிறது.

**அரசுகள் பேச்சு . . . தொடர்ச்சி . . .**

இடையில் உள்ள குறுகிய கடற்பரப்பை எல்லை தாண்டும் சிக்கலுக்கு காரணமாக முன்வைக்கின்றனர். இந்த இடத்திலேயே கச்சத்தீவு மீட்பு என்பது அரசியல் ரீதியிலான முக்கிய கோரிக்கையாக தமிழ்நாட்டின் அரசியல் மட்டத்தில் எழவே செய்கிறது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு நியாயமான, இருதரப்புக்கும் உகந்த தீர்மானகரமான முடிவை நோக்கிய பேச்சுவார்த்தையை இருநாட்டு மீனவத் தலைமைகள் மேற்கொள்ள முயற்சிப்பது இருநாட்டு மீனவத்தொழிலாளர்களுக்கான முக்கிய தேவையாக உள்ளது. கடந்த காலங்களில் இருநாட்டு மீனவர்களும் சகோதரர்களாக பழகிய காலஞ்சென்று இன்றைய பொருளாதார, வியாபார உலகு எல்லைச்சிக்கலை மேலும் கூர்மடையச் செய்திருக்கிறது. அரசுகள் உளப்பூர்வமான பேச்சுவார்த்தை திட்டத்தை மேற்கொள்ள இருநாட்டு மீனவர்களும் அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது.

• • •

**நோபல் பரிசு . . . தொடர்ச்சி . . .**

கடந்த புதன்கிழமை(17) நோபல் அறக்கட்டளை அமைந்து ள்ள ஸ்வீடனின் பொருளாதார குற்ற ஆணையம் மற்றும் போர் குற்றப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த புகார், ஆல்ஃபிரட் நோபலின் உயில், அமைதி பரிசு நிதியை அமைதியை ஊக்குவிக்கும் நோக்கங்களுக்காக சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்துகிறது மற்றும் போரை அல்லது வெளிநாட்டு இராணுவத் தலையீட்டை முன்னெடுப்பதற்கு அவற்றின் பயன்பாட்டைப் பயன்படுத்துகின்றது என்று வாதிடுகிறது.

மச்சாடோவுக்கு பரிசுத் தொகையை வழங்குவது அந்த ஆணையை மீறுவதாகவும், ஸ்வீடிஷ் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக இருக்கலாம் என்றும் அசாஞ்ச் வாதிடுகிறார். அதே நேரத்தில், அமைதிக்கான நோபல் பரிசை "போர் கருவியாக" பயன்படுத்தலாம் என்று எச்சரித்துள்ளார்.

கரீபியனில் அதன் கடுமையான இராணுவக் குவிப்புக்கு மத்தியில் வாஷிங்டன் பலத்தைப் பயன்படுத்துவதை ஆதரித்த மச்சாடோவின் தொடர்ச்சியான பொது அறிக்கைகளை இந்த புகார் மேற்கோள் காட்டுகிறது. வெனிசுலாவின் கடற்கரையில் படகுகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களை தான் நியாயப்படுத்தியதாக அசாஞ்ச் சுட்டிக்காட்டினார், இது இன்றுவரை 95 பேரைக் கொன்றுள்ளது. அமெரிக்கா "போதைப் பொருள் பயங்கரவாதிகளை" குறிவைப்பதாக கூறுகிறது, அதே நேரத்தில் ஐ.நா. இந்த தாக்குதல்களை "சட்டத்திற்கு புறம்பான கொலைகள்" என்று கண்டித்துள்ளது.

### மலையக காணி.. . தொடர்ச்சி ...

பார்க்கப்பட்டது. அதேநேரம் மனோ கணேச னின் இந்தக் கருத்தை உடனடியாக வரவேற்று, இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தனது பேஸ்புக் பக்கத்தில் முக்கியப் பதிவொன்றை வெளியிட்டார்.

"வடக்கு, கிழக்கில் குடியேற வருமாறு மலையக உறவுகளைப் பாசத்துடன் அழைக்கின் றோம்" என்று அவர் அழைப்பு விடுத்தார். வடக்கு-கிழக்கு மக்கள் மலையக உறவுகளுக்கு உதவ தங்கள் சொந்த நிலங்களைக் கொடுப் பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்றும், அரச காணிகளை அவர்களுக்குப் பெற்றுத்தர தமிழரசுக் கட்சியால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார். எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் தமது சமூக ஊடக பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள பாராளுமன்ற உறுப்பி னர் இராமநாதன் அர்ச்சுனா, "உங்கள் சொத்துக் களை விற்று வீடற்ற மலையக மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்த பின்னர் புலம்பெயர் தமிழர்களின் காணிகளை வாங்கித் தருகிறோம்" என்று மனோ கணேசனின் கருத்துக்கு பதில ளித்துள்ளார்.

இதன்படி அவரது பதிவில் "மனோ கணேஷனின் தந்தை ஒரு நடிகர் என்பதால் அவர்களுக்கு பரம்பரை சொத்து இருக்கிறது தானே. அதை விற்று அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள். பின்னர் நாங்கள் புலம்பெயர் தமிழர்களிடம் காணிகளை பெற்றுத் தருகிறோம். புலம்பெயர் தமிழர்கள் போராட்டத்தில் தமது உறவுகளை இழந்து தப்பிப் பிழைத்த ஒரு சிலரே புலம் பெயர்ந்து கஷ்டப்பட்டு வாழ்கின்றனர். அதனால் நீங்கள் முன்னுதாரணம் காட்டுங்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் கிழக்கில் உள்ள சில முஸ்லிம் கட்சிகள் மலையக மக்களுக்கு வடக்கு கிழக்கில் காணியை பெறும் யோசனையை எதிர்த்துள்ளன.

மலையக மக்களின் காணி உரிமைப் பிரச்சினை என்பது, வெறுமனே லயன் வீடுகளில் இருந்து தனி வீடுகளுக்கு மாறுவது மட்டுமன்று , அது சமூகப் பாதுகாப்பு, சட்டபூர்வ அங்கீகாரம் மற்றும் தேசிய இன ஒருமைப்பாடு தொடர்பான ஆழமான பிரச்சினையாகும். வடக்கு-கிழக்குத் தமிழ் அரசியல் தலைவர்கள், வரலாற்றுத் தவறைத் திருத்திக்கொண்டு, மலை யக மக்களின் உரிமைகளுக்காகப் பாராளு மன்றத்துக்கு வெளியிலும் உள்ளேயும் தொடர் ந்து குரல் கொடுத்துள்ளனர். சிலர் மறைமுகமாக அதே நிலைப்பாட்டில் உள்ளனர். எனினும் இன்னமும் அதே நிலைப்பாட்டில் உள்ளமையும் புலனாகிறது.

அண்மையில் மனோ கணேசன் முன் -வைத்தகூற்று மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் எடுத்துள்ள ஒருங்கிணைந்த நிலைப்பாடு, தமிழ் பேசும் சமூகங்கள் இனப்பிரச்சினைக்கு உள்ளேயே, தமது அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் புதிய தளத்தில் ஒன்றிணைவதை வலியுறுத்துகின்றது. எனினும் கிழக்கில் உள்ள சில முஸ்லிம் கட்சிகள் மற்றும் இராமநாதன் அர்ச்சுனா போன்றோரின் கருத்துகள் மலையக பெருந்தோட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை விடவும் அரசியல் நோக்குடையதாகவே பார்க்கப்படுகின்றது. எது எப்படியிருப்பினும் குறித்த விடயம் தற்போது மலையக மக்களின் காணிப் பிரச்சினைக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. இது, மலையக மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காத பட்சத்தில், ஒட்டுமொத்தத் தமிழ் சமூகமும் அவர்களைத் தழுவிக்கொள்ளத் தயாராக உள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்தப் புதிய நகர்வுகள், மலையக மக்களுக்கு அவர்களின் சொந்த மண்ணிலேயே காணி உரிமை கிடைப்பதற்கான அரசியல் அழுத்தத்தை அதிகரிக்குமா? அல்லது வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்துக்கு இடம்பெயரும் வகையிலான ஒரு மாற்றுத் தீர்வாக மாறுமா? என்பதை இலங்கையின் எதிர்வரும் அரசியல் நகர்வுகளே தீர்மானிக்கும்.

• • •

### 17 வது மகாநாடு.. . தொடர்ச்சி ...

பலவேலைத்திட்டங்களையும் தொடர்ந்து தக்கவைத்து தமிழரசுக்கட்சியின் செல்வாக்கை காப்பாற்றி வருகிறார்.

2024 பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பா ணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி பாரா ளுமன்ற பிரதிநித்துவத்தை இவரே தக்கவைத்தார். சிறிதரன் இல்லை எனில் யாழ்ப்பாண மாவட்டத் தில் இம்முறை அனைத்து பாராளுமன்ற உறுப்பி னர் பதவிகளும் தேசிய மக்கள் சக்திக்கே சென்றி ருக்கும்.

கிளிநொச்சியில் சிறிதரனுக்கு 2010 தொடக் கம் 2024 வரை எதிராக செயல்படும் மு.சந்திரகுமாரை தமிழரசுக்கட்சியுடன் இணைப் பதை சிறிதரன் விரும்பமாட்டார் என்பது வெளிப் படையான உண்மை. இவ்வாறான நிலையில் புதிதாக தமிழ்தேசிய கூட்டமைப்பு ஆரம்பித்தா லும் அது மாகாணசபை தேர்தலில் வேட்பாளர் பட்டியல் ஆசன ஒதுக்கீட்டில் கருத்தொற்றுமை ஏற்படுவதற்கு வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் கிளிநொச்சியில் பல சிக்கல்களை தாண்டவேண்டிய நிலை உள்ளது.

கிழக்கு மாகாணசபை தேர்தலை பொறுத் தவரை மூன்று இன மக்கள் வாழும் மாகா ணம் தமிழ்தேசிய கட்சி ஆட்சியமைக்க வேண்டு மெனில் மூன்று மாவட்டத்திலும் இருந்து பெறப்படும் 37 ஆசனங்களில் ஒரு கட்சி 19 ஆசனங்களை பெறவேண்டும். 19 ஆசனங்களை பெறவேண்டுமாயின் தமிழ்தேசிய கட்சிகள் அனைத்தும் ஒரு சின்னத்தில் வேட்பாளர்களை விட்டுக்கொடுப்புடன் நிறுத்தினால் மட்டுமே ஓரளவு சாத்தியமாகும்.


அதன்மூலம் தமிழர் ஒருவர் முதலமைச்சர் பதவியை பெறலாம். விட்டுக்கொடுப்பு ஒற்று மை இல்லாமல் தனித்தனியாக தமிழ்தேசிய கட்சிகள் பிரிந்து மூன்று நான்கு கட்சிகளாக கிழக்குமாகாணத்தில் போட்டியிட்டால் தமிழர் களுடைய பிரதிநித்துவம் குறைந்து தமிழ் முதலமைச்சர் பதவியை பேரம் பேசும் நிலைகூட இல்லாமல் மீண்டும் முஸ்லிம் ஒருவருக்கே முதலமைச்சர் பதவி கிடைக்க வாய்ப்புள்ளது.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு சின்னத்தில் கிழக்குமாகாணத்தில் தேர்தலை சந்திக்கும் வேலைத்திட்டங்களை பள்ளிவாசல் சமூகம் மேற்கொண்டுவருவதையும் அறியமுடிகிறது.

தமிழ்தேசிய கட்சிகளின் ஒற்றுமைபற்றி சிந்திப்பதற்கு முன் இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் இரண்டு அணி ஒரு அணியாக செய்பட இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி 17 வது மாகாநாட்டை கூட்டாவிட்டால் 80 ஆண்டுகள் நினைவுடன் 2029 ல் தமிழரசுக்கட்சி காணாமல் போகும் என்பதே உண்மை.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்





